M. 1803. Vol. II—No. 4

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷ ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.



ஸ்ரீகாசி ஸ்ரீவிஸ்வேஸர் சந்நதி மூலஸ்தானம்.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ. | ரக்தாட்சி௵ கார்த்திகை௴ 1924 நவம்பர் | இதழ் ச

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	161
2.	பாரத நாடு	162
3.	திருக்குறள்	163
4.	தமிழகத்தாருக்கு	165
5.	பசி கிடத்தல்	169
6.	அண்டங்காக்கையின் கண்டனக்கூற்று ...	171
7.	லீலாவதி	179
8.	நமது சிற்பம்	187
9.	ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ...	190
10.	அவுரங்கசீபின் இளமை	195
11.	சித்திரப் பத்தி	199
12.	சுகாதாரம்	202
13.	விநோதக் குறிப்புகள்	204
14.	பத்திராதிபர் குறிப்பு	206
15.	மதிப்புரை	210
16.	வைத்தியக் குறிப்புகள்	211
17.	16 சுகவழிகள்	212

சித்திரப் படங்கள்.

1. ஸ்ரீகாசி ஸ்ரீவிஸ்வேசர் சந்நிதி மூலஸ்தானம்
2. துர்க்கா தேவி, ஆலயம். சாரநாத்.

210844
சென்னை-600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினாங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் அவ்விபரம் நமக்குத் தெரிவிக்கவேண்டும் அதற்கு மேல் கவனிக்கப்படமாட்டா.

மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தியாகாது!

லக்ஷ்மி இதழ 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட் டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. விலை ரூ. 3.

தபாற்சிலவு வேறு.

சொற்ப காபிகளே கைவசமுள்ளது.

முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ் தபால், பெட்டி 99, சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

மலரிற் பிறந்து நெடுமா லுரத்தில்
வசிக்கு மின்னே
அகற்ற பேறு விழை வேற்கவ்
வண்ண மருள் செய்திட்டால்
உலகிற்கு நன்மை யுண்டு
உன்றனக்கும் புகழுண்டு கண்டாய்
பலமிக்க தானவ னல்லேன் நன்
மானிடப் பாலகனே.

பாரத நாடு.

சந்த்ரவதி சாவித்ரி
ஜானகியின் நாடு
தமயந்தி திரௌபதியுஞ்
சார்ந்திருந்த நாடு
இந்திரர்சொல் கண்ணகியின்
எழில் நிறைகொள் நாடு
எங்க ளவ்வை யின்மொழியே
எங்குமொளிர் நாடு
அந்தமிகு காரைக்கால்
அம்மை சிவ நாடு
ஆண்டாளும் மங்கையர்தம்
அரசிவந்த நாடு
பந்தமிலா விக்டோரியா
பரிந்தாண்ட நாடு
பாவையர்தம் வடிவான
பாரதநன் னாடே. (1)

ஞானமொடு கல்விநலம்
நல்குதிரு நாடு
நாதாந்த மோனநிலே
நாட்டமிகு நாடு
தானமதை உடலாகத்
தாங்குகின்ற நாடு
தான்வருந்திப் பிறர்க்குதவுந்
தயை பிறந்த நாடு
வானவருந் தொழுதேத்தும்
வளம்பெருகு நாடு
வாழ்விழந்தே இது காலே
வாடுகின்ற நாடு
ஊனமிலா உரிமைபெற
ஊக்கமிகு நாடு
உத்தமரை அளிக்கின்ற
ஒரு பரத நாடே. (2)

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

திருக்குறள்

ஸ்ரீமான் அ. ச. அருணுசல ரெட்டியார் எழுதியது.

இந்நூல் இவ்வுலகத்திலுள்ள பல சமயத்தினராலும் போற்றப் படும் அரிய பெரிய வேதநூலாகும். இது கடைச் சங்கத்து மருவிய பதினெண் கீழ்க்கணக்குகளுள் ஒன்று. சிறந்த குறள் வெண் பாக்களை உடைய நூலாயிருப்பதனுல் இதற்குத் "திருக்குறள்" என்று பெயர் வந்தது. இந்நூல் மூன்று பாகங்களைக் கொண்டது. அவை, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. இந் நூலில் பப்பத்துக் குறள் வெண்பாக்களால் ஒவ்வொரு பொருளையும் வற்புறுத்திக் கூறும் 133 அதிகாரங்கள் உள்ளன. இந்நூலுக் குப் பத்துப்பேர் உரை இயற்றியிருக்கின்றன ரெனினும், அவற் றில் பரிமேலழக ருரையே சிறந்ததாகும். நம் முன்னோர்கள் இந் நூலுக்கு வெவ்வேறு விதமான பெயர் வைத்திருக்கின்றனர். அவை—முப்பால், தெய்வநூல், திருவள்ளுவர், திருவள்ளுவப் பயன், தமிழ்மறை, பொய்யாமொழி, பொதுமறை, பொருளுரை, வாயுறை வாழ்த்து, உத்தரவேதம் என்பன வெனக்கூறுவர்.

திருக்குறள் நூலை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவர். இவ ருடன் பிறந்தவர் ஔவை, கபிலர் முதலானோர். இவர் தொண்டை மண்டலத்தில் மயிலாப்பூரில் வள்ளுவர் மனையில் வளர்ந்தவர். இவர் கடைச் சங்கத்தார் காலத்தில் இருந்தவர். இவ ரியற்றிய நூலுக்குப் பல பெயருள்ளது போன்று இவருக்கும் பல பெயர்க ளுண்டு. அவை—தேவர், தெய்வப் புலவர், முதல் பாவலர், பெரு நாவலர், புலவர், பொய்யில்புலவர், செந்நாப் போதர், மாதாநுபங்கி, நாயனுர், நான்முகனுர் என்பன வென்பர். இவரியற்றிய திருக்குறள் பல சமயத்தினருக்கும் பல நாட்டினருக்கும் பொதுவாகப் பல நீதிகளைக் கூறுவதால் இவரை ஒவ்வொரு சமயத்தினரும் தத்தமது சமயத்தவ ரெனக் கருதுகின்றனர். ஆனுல் இவர் பல சமயத்தினருக்கும் பயன் படும்படி இந்நூலைச் செய்ததாலும், இது பற்றி இந்நூலுக்குப் "பொதுமறை" என்ற பெயர் ஏற்பட்டிருப்பதாலும், அறிஞர்கள் ஆராய்ச்சியினுல் இவரைச் "சர்வசமய சமரச வாதி" என்று கூறுவதா லும், இவருடைய சமயம் "பொதுச் சமயம்" என்றே கூறவேண்டும்.

இத்திருக்குறள் நூல் முதல் முதல் 1800 ஆண்டுகளுக்கு முன் (இலங்கையை அரசாண்ட கஜபாகு அரசன் காலத்திற்கு முன்) கடைச் சங்க காலத்தில் தமிழில் இயற்றப்பட்டது. பிறகு இந்நூ லின் அருமையும் பெருமையும் அறிந்து பல அறிவாளிகள் தத்தமது

மொழியில் மொழி பெயர்க்க வாரம்பித்தனர். தமிழ் மொழியை இனிதறிந்த டாக்டர் கிறுல் என்பவர் 1856-ம் ஆண்டில் இந்நூலைத் தமிழிலிருந்து ஜர்மனிலும், இலத்தீனிலும் மொழி பெயர்த்து அச்சிட்டார். ஜர்மன் மொழி பெயர்ப்பு லிப்சிக் என்னு மிடத்திலும், இலத்தீன் மொழி பெயர்ப்பு லண்டன் நகரத்திலும் அச்சிடப் பட்டது. ஏரியர் என்னும் அறிஞர் இந் நூலைப் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்திருக்கிருர். பின்னர் எல்லிஸ் என்பார் இந்நூலின் சில பாகங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சிட்டார். ரெவரண்ட் "ட்ரு" பாதிரியாரும் இந்நூலின் 63 அதிகாரங்களை ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளிப்படுத்திஞர். இன்னும் வீரமாமுனிவர் என்னும் பெயருடன் விளங்கிய பெஸ்கி பாதிரியார் திருக்குறள் முழுவதையுமே இலத்தீனில் மொழி பெயர்த்து எழுதிஞர். அவர் எழுதிய அக்கையெழுத்துப் பிரதியை சர் வால்டர் எல்லிஸ் துரை மகஞர் 1877-ல் இந்திய ஆபீஸ் புத்தக சாலைக்கு இஞமாக அளித்தார். 1885-ல்திரு முநகேச முதலியார் என்பார் லாஸரஸ் என்பவருடைய ஆங்கில மொழி பெயர்ப்பை அச்சிட்டார். அதன் பின்னர் இராமாநுஜ கவிராயர் என்னும் தமிழ்ப் புலவரின் மாணவரான டாக்டர் போப் ஐயர் இத்திருக்குறளைச் செய்யுளாகவே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சிட்டதோடு மேற் குறிப்பிட்ட வீரமாமுனிவரின் லத்தீன் மொழி பெயர்ப்பையும் அத்துடன் சேர்த்து அச்சிட்டிருக்கிருர். கடைசியாகச் சில ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ வ. வெ. சுப்ரமணிய ஐயர் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தெலுங்கு மொழியிலும் திருக்குறள் மொழி பெயர்ப்பு உண்டு. அதனை மொழி பெயர்த்தவர் இன்னரென்று தெரியவில்லை. ஜஸ்டிஸ் கோவிந்தப் பிள்ளை என்னும் அறிஞர் திருக்குறளை மலையாளத்தில் மொழி பெயர்த்திருக்கிருர். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் இருந்த அப்பைய தீட்சதர் என்னும் பெரியார் இந்நூலைச் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்திட்டார். அன்றியும் தியாக சமுத்திரம் திரு. சக்கரபாணி ஐயர் என்பவர் இப்பொழுது திருக்குறள் முழுவதையும் சமஸ்கிருதத்தில் சுலோக ரூபமாக மொழி பெயர்த்திருக்கிருர். இந்நூலின் மொழி பெயர்ப்பு சிங்கள மொழியில் இல்லாததால் அதனை அம்மொழியிலும் மொழிபெயர்க்குமாறு திரு. சீனி. வேங்கிடசாமி அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நினைவுறுத்தி யிருக்கிருர். ஆஞல் இத்திருக்குறள் உருது மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது தெரியவில்லை. இல்லாவிடின் அம்மொழியிலும் இந்நூல் எழுதப் படவேண்டும். அன்றியும் இவ்வருமையான நூலை ஒவ்வொருவரும் வாங்கிப் படிப்பதோடு அதிற் கூறப்பட்டுள்ளபடி நடந்து இம்மையிலும் மறுமையிலும் சுகம் பெற முயல வேண்டும். இந்நூல் பேரின்ப வீட்டின் (மோக்ஷவீட்டின்) திறவுகோலே யாகும். "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற முதியார் மொழியையும் உணர்க. இந்நூலின் பெருமையை யறிந்தே முதியோர்கள் இக்குறளைச் சொல்லுவது உறுதி தரும் (பேரின்ப வீடு தரும்) என்று சுருங்கக் கூறியுள்ளார்கள்.

தமிழகத் தாருக்கு

ஸ்ரீமாங் பண்டித எஸ். முத்துசுவாமிப்பிள்ளை எழுதியது.

III. ஆங்கிலமும் தமிழும்.

ஒரு ஊரிலே ஒரு வண்ணாத்தி யிருந்தாள். அவளுக்குக் குழந்தை யில்லை. மகவில்லாக் குறையால் அவள் மனவாட்ட முற்றிருந்த பொழுது அவளுடைய கழுதைகளில் ஒன்று ஒரு குட்டிபோட்டது. ஆகவே அவள் பெருமகிழ்ச்சியடைந்து அக்குட்டிக்கு 'கங்காதரன்' எனப் பெயரிட்டு வெகு அருமையாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தாள். வரவே அக்கழுதைக் குட்டி ஏதோ நோய் கண்டு இறந்து போயிற்று.

தன் பிள்ளைக் கலி தீர்க்க வந்த கங்காதரனும் மாண்டு போக, வண்ணாத்தி மனம் பொருளாய் "கங்காதரா மாண்டாயோ? கங்காதரா மாண்டாயோ?" என வாய்விட்டுக் கதறத் தொடங்கினள். வண்ணாத்தியின் துயரத்தைக் கண்டு ஆற்ற முடியாமல் அவள் அயலாரும் அவ்வாறே அரற்றலாயினர். பின்னர் அவ் வூராரும் ஒப்பாரி வைத்தனர். எங்கும் "கங்காதரா மாண்டாயோ?" என்ற ஒலியே கேட்கலாயிற்று. உண்மை யின்னதென்று ஒருவருமே ஆராயத் துணிந்தாரில்லை.

அவ்வண்ணமே 'ஆங்கிலம் வந்ததும் தமிழ் தொலைந்தது' என்னும் முறைப் பாடும் தமிழுலகம் எங்கும் கேட்கப் படுகின்றது.

எங்கோ ஒரு மூலையில் எப்பொழுதோ ஒரு காலத்தில் கூழுக்குப் பாடியும் கும்பி நிறைக்க முடியாத யாரோ ஒருவர் 'ஆங்கிலம் தலை நீட்ட, தமிழ் சாய்ந்தது' என ஒப்பாரி வைத்தார். அவ்வொப்பாரி இப்பொழுது தமிழகம் முழுதும் முழங்குகின்றது.

'முன்னாடு சென்ற வழி பின்னாடு' என்னும் கொள்கை வேரூன்றி யிருக்கும் தமிழகத்திலே உண்மையை ஆராய்ந்தறிய எவர் தான் துணிவர்?

ஆங்கிலத்தின் வரவால் தமிழ் தாழ்ந்தது என்னும் முறைப் பாடு எவ்வளவிற்கு உண்மையானது எனத் திட்டமா யறிவதற்கு, ஆங்கிலம் வருமுன் தமிழ் எந்நிலை யுற்றிருந்ததெண ஆராய்தல் மிக அவசியம்.

பண்டைக்காலத்தில் தமிழ்ப்பயிற்சி இவ்வாறு நடைபெற்ற தெனக் காட்டும் சான்றுகள் இல. தமிழ்ப் பயிற்சியை முறைப் படுத்தி நடாத்திய அரசியல் இலாகாக்களோ குடித்தன ஏற்பாடு களோ இருந்ததாகவும் தெரியவில்லை. கல்வி வளர்ச்சிக்குரிய ஸ்தாபனமாக முச்சங்கங்கள் இருந்தனவாக மட்டுமே நமது பண்டைய

நூல்களால் அறியக் கிடக்கின்றன. முதற்சங்கத்தில் ஐந்நூற்று நாற்பது புலவர்களும் இடைச்சங்கத்தில் ஐம்பத்தொன்பது புலவர்களும் கடைச்சங்கத்து நாற்பத்தொன்பது புலவர்களும் தமிழாராய்ந்ததாகக் கூறப்படுகின்றன.

தமிழ் உயர்ச்சி யுற்றிருந்த அப்புராதன காலத்தும், முதல் சங்கத்துக்குப் பின்னர் தமிழ்ப் புலவர் தொகை முறையே அருகி வந்ததாகவே காணப்படுகின்றது. தமிழின் மிக உன்னத காலமாகிய கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் தமிழ் நாட்டில் எத்தனை கல்விச்சாலைகள் இருந்தனவென்று கூறும் நூல்களோ பிற பிரமாணங்களோ காணக் கிடைக்கின்றில. சங்கப் புலவர்கள் தமிழ் ஆராய்ச்சி செய்தனரே யன்றி தமிழ்ப் போதனை செய்திலர். தமிழ்ப் பயிற்சி அந்தந்த ஊர்களிலும், நத்தங்களிலும், குப்பங்களிலும், பாக்கங்களிலும், பட்டினங்களிலும் உள்ள ஒட்டுத்திண்ணை ஆசான்கள் மூலமே நடை பெற்றிருத்தல் வேண்டும். வடநாட்டிலிருந்தன போன்ற குரு குலங்கள் தமிழ் நாட்டில் இருந்ததற்கு லக்ஷியமில்லை. வடநாட்டு நாலந்தை, தக்ஷசீலைக் கலாசாலைகளுக்கு ஒப்பான கல்வி ஸ்தாபனங்கள் எதுவும் தென்னாட்டில் இருந்ததாகவும் புலப்படவில்லை. புலவர்கள் அரசர்களாலும் குறுநில மன்னர்களாலும் போற்றப் பட்டு வந்தனர். தமிழுக்கு அணிகலனாக விளங்கும் நூல்களை எழுதிய ஆசிரியர் வாழ்ந்த அப்புராதன காலத்து, தமிழ் மக்களனைவரும் கல்வி கேள்விகளிற் சிறந்திருந்தன ரென்றேனும் கல்விப் பயிற்சிக்குரிய சாதனங்கள் மிகுந்திருந்தன வென்றேனும் துணிதல் பொருந்தாது. அங்கங்கே அருமையாய்க் காணப்பட்ட தமிழ்ப் புலவர்களிடத்து, உயர்தரக் கல்வி கற்க விருப்பமுடையோர் அடைந்து கல்வி கற்றிருத்தல் வேண்டும். பிரயாணச் சௌகரியங்கள் குறைந்திருந்த அக்காலத்து, கல்வி கற்கப் பேரவா உடையோரும் ஏலாமையால் மனந்தளர்ந்திருத்தலும் கூடும். சுவடிகளெல்லாம் ஏட்டுப் பிரதிகளாகவே இருந்தமையின் உயர்தர நூல்களை சாமானியர் கண்டிருக்க மாட்டார். தற்காலத்துக் கலியாண காலங்களுக்குப் பயன் படுவனவாகிய வார்ப்பு, செம்பு, அண்டா முதலிய பாத்திரங்கள் சீமான்கள் வீட்டில் மட்டும் இருந்து வருதல் போல, அக்காலத்து அரண்மனைகளிலும் குறுநில மன்னர் மாளிகைகளிலும் சீமான்கள் இல்லங்களிலும் மட்டுமே சங்க நூல்களும் பிறவும் இருந்திருத்தல் வேண்டும். ஆகவே சாமானிய ஜனங்களுக்குக் கல்வி கற்றற்குரிய சௌகரியங்கள் எத்துணை அற்பமா யிருந்திருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கற் பாலது. சோழமன்னர்களில் சிறந்தவனான ராஜ ராஜன் காலத்திலும் கல்விச்சாலைகள் மூலம் முறையான தமிழ்ப் பயிற்சி நடை பெற்றதாகப் புலனாகவில்லை. ராஜ ராஜன் ராஜதானியிலே அத்தாணி மண்டபமும், மந்திராலோசனை சபையும், நடன சாலையும், தேவார சிற்சபையும், யானைக் கோட்டாரங்களும், குதிரைச்சாலைகளும், பசுக்கோட்டில்களும், ஆயுதச்சாலைகளும், கோயில்களும் இருந்தனவாக நூல்கள் கூறுகின்றன. கல்விச்சாலை

களைப் பற்றி ஒரு மொழியேனும் இல்லை. பொழில்களிலும் பொய் கைக் கரைகளிலும் சாஸ்திர அறிஞரும் ஞானிகளும் நிறைந்திருந் தனராம். ஆகவே தற்காலக் கல்வியிலாகா போன்ற ஏற்பாடுகளோ, கலாசாலைகள் போன்ற ஸ்தாபனங்களோ ராஜ ராஜன் காலத்திலும் இருந்ததில்லை யென்று துணிந்து கூறலாம்.

கி. பி. ஏழாவது நூற்றாண்டின் பின்னர்த் தோன்றிய சைவ மடங்களிலும் ஜீயர் மடங்களிலும் சமய நூல்களையும் ஏனையிலக்கண இலக்கியங்களையும் கற்பிக்க முறையான ஏற்பாடு ண்டாயிற்று. வட வேங்கடம் தென்குமரி ஆயிடையுள்ள தமிழ் நாட்டுக்கு இம்மடா லயங்களிலுள்ள கல்விச் சாலைகள் எம்மாத்திரம்! ஆகவே சாமானிய ஜனங்களுக்கு தமிழ்ப் பயிற்சிக்குரிய சாதனங்கள் அக்காலத்திலும் மிக அருகியே இருந்தன.

பதினெட்டாவது நூற்றாண்டிற்றான் ஆங்கிலம் இந்தியாவில் தலை காட்டிற்று. முதலில் கிறிஸ்தவப் பாதிரிமார்களே ஆங்கிலப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தனர். அன்னோரும் தமிழை மறந்து விடவில்லை. ஆங்கிலப் பள்ளிக்கூடங்களி லெல்லாம் தமிழையும் உப பாஷையாகக் கற்பித்தே வந்தனர்.

1857ஆம் சென்னையில் சர்வ கலாசாலை ஸ்தாபிக்கப் பெற்று நாட்டின் பல பாகங்களிலும் ஹைஸ்கூல்களும் காலேஜுகளும் தோன்றலாயின. இவ் வித்தியாலயங்களில் ஆங்கிலத்துக்கே பிரதான ஸ்தானம் கொடுக்கப் பட்டதாயினும் தமிழும் உப பாஷையாக முறை படப் போதிக்க ஏற்பாடாயிற்று. போதனா முறையிற் பயிற்சி பெற்ற கலாசாலைப் பட்டதாரிகள் மேற் பார்வையில் மாணவர் பெறும் ஒரு மணிக் கூறு போதனையும், சூரியோதயம் முதல் அஸ்தமனம் ஈறாக நடைபெற்று வந்த பண்டை நாளைய நெட்டுருப் பயிற்சியினும் பலப்பல மடங்கு சிறந்ததென்பது கேவலம் புனைந்துரை யன்று. பின்னர் தேச பாஷைக் கல்வி யிலாகா ஏற்பட்ட காலத்து தமிழ்ப் பயிற்சி முன்னிலும் மிக வலியுற்றது. தற்காலத்துக் கிராமங்கள் தோறும் பள்ளிக்கூடங்கள் காணப் படுகின்றன. சமீபத்தில் வெளி வந்த ஒரு கணக்கின் படி தமிழ் நாட்டிலே பத்துக் கிராமங்களுக்கு ஏழு பள்ளிக்கூடங்கள் விகிதம் இருக்கின்றன. கீழ்த்தரப் பள்ளிக் கூடங்களை இன்னும் விருத்தி செய்வதற்கு கனந் தங்கிய கல்வி மந்திரி ஒரு புது ஏற்பாடும் நடப்பிக்க ஆலோசித்து வருகின்றனர். ஆகவே முன்னைய விட இக்காலத்தில் தமிழ்ப் பயிற்சிக்குரிய ஏந்தல் கள் மிக மிக உள்ளன வென்பது வெளிப் படை. இந்த நற்காலத்திலும் "நூற்றுக்கு எழுவருக்குக் கை யெழுத்திடத் தெரியும், நால்வருக்கு நன்றாகப் படிக்கத் தெரியும்" எனக் காரைகுடி 'குமரன்' ஆசிரியர் கூறிக் கவலையடைகின்றார். இஃதுண்மையாயின் ஒட்டுத்திண்ணை ஆசான்கள் மூலம் கல்விப் பயிற்சி நடை பெற்ற அப்புராதன காலத்து, தமிழ்ப்பயிற்சி மிகுந்திருந்த தென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

இம் மட்டோ? முற்காலத்து நூல்களெல்லாம் ஏட்டுப் பிரதிகளாகவே இருந்தன. ஆகையால் சாமானிய ஜனங்களுக்கு உயர்தரக் கல்வி பெறுவது வெகு சிரமமாகவே இருந்திருத்தல் வேண்டும். அச்சுக்கூடங்கள் மிகுந்து பிரசுர கர்த்தர்களும் நூலாசிரியர்களும் பெருகி, தமிழ் நூல்கள் ஆயிரம் ஆயிரமாக வெளிவரும் இக்காலத்தில் விருப்பமுடையவர்களுக் கெல்லாம் தமிழ் கற்க ஏந்தல்கள் மிகுதி. சங்க காலத்து வாழ்ந்த மக்களில் ஆயிரத்துக்கு ஒருவரேனும் திருக்குறள் ஏட்டைக் கண்டிருக்க மாட்டார் எனத் துணிந்து கூறினும் அவ்வளவு தவருகாது. இக்காலத்து விருப்பமுடையவர்களுக் கெல்லாம் திருக்குறளையும் ஏனைய தமிழ் நூல்களையும் எளிதில் பெற முடியும்.

இதுகாறும், ஆங்கிலம் மலிந்த இக்காலத்து தமிழ்ப் பயிற்சிக்கு வாய்ந்துள்ள சௌகரியங்களை மட்டுமே விளக்கினேம். இனி ஆங்கிலத்தினல் தமி ழடைந்த நலங்களையும் ஒருவாறு எடுத்துக் கூறுவோம்.

முற்காலத்துத் தமிழில் வசன நூல்களே இருந்ததில்லை. தமிழ் வசன நூல்களுக்கு அடிகோலியவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமார்களே. அவர்களது கைப் புண்ணியத்தால் இப்பொழுது நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ந்து கொண்டே வருகின்றன. மேனுட்டுச் சாஸ்திரங்களும் தமிழில் தோன்றத் தொடங்கி யிருப்பதால் தமிழர்களின் சாஸ்திர ஞானமும் பெருக்க மடைந்து வருகிறது. தமிழ் ஆரிய வைத்திய முறைகளும் ஆங்கில முறைகளை யொட்டித் திருத்தமும் விளக்கமும் பெற்று வருகின்றன. தமிழர்களுக்கு உழவே முக்கிய ஜீவனத் தொழிலாக இருப்பினும் உழவுக்குரிய நூலாக ஏரெழுபதைத் தவிரத் தமிழர்களுக்கு வேறு நூலேது? தற்காலத்திலோ மேனுட்டு சாஸ்திர ரீதியில் உழவு நூல்கள் பல தோன்றி உழவைப் பற்றிய உண்மை யறிவுகள் தமிழர்களுக்குப் புலனுகி வருகின்றன. இவ்வண்ணம் ஆழ்ந்து நோக்கில் ஆங்கில வரவால் தமிழ் குன்றவில்லை யென்பது நன்கு விளங்கும்.

ஆனல், ஆங்கிலத்தின் ஸ்தானத்தைத் தமிழ் பெற்று நாடு முழுதும் பொதுக் கல்வி தமிழ் மூலம் நடை பெற்ருல் தமிழின் நிலைமை இதனினும் பன்மடங்கு உயர்வுறுமே என்று சிலர் கூறுவர். அது உண்மையே. ஆயின் அந் நிலைமையை அடைவதற்கு முன் தமிழை ஆங்கிலத்தின் சீரிய நிலைக்கு உயர்த்த நாம் முற்படல் வேண்டும். தெலுங்கு, மலையாளம், மருத்தி, பங்காளி முதலிய இந்திய தேச பாஷைகளோடு நமது அருமைத் தமிழை ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் நாணத்தால் தலை தாழ்த்தவே வேண்டும்.

பண்டை நூற் சிறப்பு மட்டுமே தமிழுக் குள்ளது. கால இயல்புக்குப் பொருத்தமான ஏனைய நூல்கள் தமிழில் வேண்டும் அளவிற்கில்லை. ஆங்கிலத்தினல் தமிழ் தாழ்ந்தது என்று முறையிடுவோர் அம்முறை பாட்டை விட்டு, ஆங்கிலத்தைத் தழுவி, தமிழை உயர்த்த முயல்வார்களாக!

ப சி கி ட த் த ல்

ஸ்ரீமாந் பா. ஆதிமூர்த்தி பாடியது.

நாற்பேரு முனிவர் எழுசீரடி.

ஸ்ரீ இராமன் 7 நாள்.

முத்தும் மணலுங் கொழித் தெறியும் முறமே யனைய முறி யலைகள்
கத்தும் கரிய கனை கடல் வாய்க் கடவுள் மனிதன் வடிவாகிப்
பத்தின்தலையோன் கொடுங்கோன்மை பாரி லொழியப் பகலேழும்
சூத்தந் துலங்கு முபவாசம் தொடரக் கிடந்தான் துணை வேண்டி.

ஏழு கடலுங் கொதித் துலக மிடிந்து பொடியா யெழு மலைகள்
வீழுந் தகர்ந்து வானோரும் விபுத ருலகும் நாச முறும்
வாழும் பிரமாண் டங்களொடு மலரோன் முதலோர் மடிந் தொழிவர்
தாழுமென்னில் நீவர என் தனுவா லறிதி யென வெகுண்டான்

பகவான் புத்தர் 28 நாள்.

மனிதனுதி யுயிக் குழுவும் மரமே யாதி வனக் குழுவும்
புனிதமாகிப் பகை நோய்கள் போக்கிப் புத்த வடிவாகி
இனிதின் வாழ அற நெறி தான் எதுவென் றிருபத் தெட்டுநாள்
பனியின் காலில் பட்டினியால் படுத்தான் தவத்தின் பலன் பெறுவான்

கல்லு முருகக் கட லுருகக் கலை களுருகக் கலை யுணர்ந்தோர்
சொல்லு முருகச் சுருதி யெலா முருகத் தூய வான் வெளியில்
எல்லும் மதியு மற்றுளவு மிளகப் பௌத்த னிருந்த தவம்
அல்லும் பகலும் நமைக் காத்த லறிவா ரறிவை அறிவாரே.

ஏசுநாதர் 40 நாள்.

அடியார்க் கடியன் அருள் வெள்ளம் அன்பினுருவம் அறவாரி
மிடியார்க்கன்றி மூடருக்கும் விருத்தர் நோயர் முதல் விரிந்த
படிமே லவர்க்கும் துயர் தீர்ப்பான் பரமன் ஏசு வடிவாகி [நின்றே.
முடியாத் தவமோர் நாற்பது நாள் முடித்தான் உண்ணு முறை

பாவம் கொடுமை கொலை துன்பம் பகைமை யாதி பார் நின்று [ந்தே
போம் என்னுயிரைப் பலி கொடுத்தால் புனித மெய்து மெனத்தெரி
தீமன்னிய சொற் சோதரரால் சிலுவைக் கிரையாய்த் திசை யேத்த
"ஆமென் னுருவாம் ஒமாகி"யாண்டான்! ஆள்வான்!! ஆள்கின்றுன்!!!

காந்தி மகாத்மா 21 நாள்.

பசுவும் புலியு மொரு துறையிற் பருகும் நமது பாரத நா
டிசையும் அறமு மொருங் கிழந்திங் கெவையு மயலார்க் கிடமாகி
பசியும் பிணியு மடிமையுந் தன் பாலாய் நிற்கும் பரிபவத்தைக்
கசியுங் கண்ணுல் "மோகனதாஸ் கரீம்சந்த் காந்தி" கண்ணுற்றுன்.

ஒத்தகுடி வாழ்க்கையைப் பெருக்கி யுலகம் புகழச் சுதந்திரத்தை
வித்தி வளர்த்துப் பல நடைதல் விதி யென்றுணர்ந்து வினை முறை
புத்தி யுரைத்தும் அறியாத புன்மை யறிந்து மனம் புழுங்கி' [யால்
சித்தங் கலங்கத் தவ வலியால் ஜெயிப்பே னிதனை எனத் துணிந்தான்.

தொடுத்தான் விரதம் உலகமெலாம் திதிக்கப் பகைவர் துணுக்கமுறப்
படுத்தா "விருபத்தோரு தினங்கள்" பகலும் இரவும் பட்டினியாய்
அடுத்தாள் அறத்தால் மனவலியால் அரிய தவத்தா லாகாத [கால்?
கெடுத்தானுளதோ வினையுளதோ கிடையொன்றுளதோ கிளத்துங்

வேட்டுந்தவத்து "ததீசி"யின்முன் விண்ணோர் குழுவின் விதம்போ
நாட்டின் தலைவர் மதத் தலைவர் நவஞ்சொல் தலைவர் நகர்த்தலைவர்[ல
ஈட்டங்திரண்டிங் கினிக் கலக மெய்தா நெறியின் இதமுரைக்கக்
கூட்டங் கலைந்த தறவாளன் குறைவில் தவமு முடிந்தனவால்

வாழ்க.

அசுரன் கொடுங் கோலழித் தொழித்த அரச குமரன் புகழ் வாழ்க!
நிசியினுலகில் அருள் வெளிச்சம் நிறைத்த புத்தன் மொழி வாழ்க!!
பசிகொள் எளியோர்க் குயிரீந்த பரமன் ஏசு பதம் வாழ்க!!!
வசைதீர் கீர்த்தி நங் காந்தி மகாத்மா வாழ்க வாழ்கவே!!!!

அண்டங்காக்கையின்
கண்டனக் கூற்று

ஸ்ரீமுகம்மது ராம் புதுவை தேசசேவகன் ஆசிரியர் எழுதுவது.

என் சரீரம் செய்த புண்ணியமோ அல்லது சமுத்திரக்கரை தான் செய்த புண்ணியமோ நான் செவ்வாயன்று மாலை பத்திரிகாலய மாகிய என் ஜெயிலைவிட்டு வெளி யேறித் திருடனைப் போல சமுத்திரத்தை யடுத்த மேடை யோரமாய்ப் பதுங்கியவாறு ஊர்ந்து கொண்டிருக்கிறேன். 'கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக்கொடுத்த' தென்று புண்ணியவான் நமது புதுச்சேரியைச் சாக்கடைச்சேரி யாகவைத்திருந்தாலும் சமுத்திரக்கரை நீள மனோகரமான ஒரு மேடையையும் கட்டிவைத்தான். அவனுக்கு வந்தனம். நிற்க. மேடையில் நான் கள்ளுண்டு மயங்கியவன்போல் தள்ளாடிக் கொண்டு அடிமேலடிவைத்துச் செல்லுகையில் பத்திராசிரியர்களுக்குக் காணியாட்சியாயிருக்கிற சிந்தனைப்பேய் மறுபடி என் மூளையைப் பற்றிக் கொண்டது. சமுத்திரக் காற்று இச்சமயம் இடையில் புகுந்து என் காதைக் குடைந்து என் சிந்தனையைச் சிதைத்து விடத் தொடங்கியது. சோழியன் குடுமி சும்மா ஆடாதென்ற முதுமொழியைப் பொய்யாக்கி, என் சிண்டைச் 'சும்மா வாகிலும் குண்டு போல் எழுந்தாடச்' செய்தது அக்காற்று! என்றாலும் அதன் சேட்டைகளைச் சட்டைசெய்யாது உதட்டில் புன்சிரிப்புடன் சிந்தனையில் முழுகியிருந்தேன் நான்.

திடீரென்று அம்மாலைக் காற்றின் மூலம் ஒரு கரடு முரடான சப்தம் என்காதைத் தாக்கியது :—"குட்மார்னிங், மிஸ்டர் எடிடர்!" திடுக்கிட்டேன் ; நாற்புறமும் மண்ணிலும் விண்ணிலும் கண்களைப் பரக்கப் பரக்கத் திறந்து சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். கூப்பிடு தூரத்தில் மனித சஞ்சாரத்தையே காணவில்லை. பின், எப்படி அக்குரல் கேட்டது? கடைசியாக, மேடையை யடுத்த பிடிச்சுவர்மீது சிறிது தூரத்தில் ஒரு பெருத்த அண்டங்காக்கை கண்ணிற் பட்டது. தன் தலையை ஒரு பக்கம் சாய்த்துக் கொண்டு "ஒன்றரைக் கண்ணோரியா, சென்னைப்பட்டணம் வாராயா" என்ற பார்வையுடன் வாயைத் திறந்தவாறு உட்கார்ந்திருந்தது. அது "பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக்கூர்வாயா" யிருந்தபோதிலும் எனக்கென்னமோ மிக விகாரமாகவும், பயங்கரமாகவுமே தோற்றிற்று. அக்காக்கையின் உருவம் தருமராஜனோடிருக்கும் எனது தாத்தாவைப் போலவும், பார்வை வெகு குறும்பும், கொழுப்பும் நிறைந்ததாகவு மிருந்தன. நமது பிதிருக்கள் ஒவ்வொரு சமயம் காக்காய் உரு எடுத்து வருவதுண்டென்று அச்சமயம் எனக்கு நினைவு வந்திருந்தால் அகத்தியம் அக்காக்கையின் காலைப் பிடித்துக்கொண்டு தாத்தா! "ஒன்று நீ என்னோடிருந்து விட வேண்டும், அல்லது

என்னை உன் கோஷ்டியில் கூட்டிக் கொள்ள வேண்டு" மென்று விடாமுண்டன் தனம் செய்திருப்பேன். ஆனால் அவ்வெண்ணம் சமயத்தில் என்னை ஏமாற்றிவிட்டதால் நான் காக்கையிடம் வெறுப் படைந்து மேடையினின் றிறங்கி விரைந்தோட லானேன். "ஆ அ அ ஆ" என்ற நகைப்பு மாலை மாருதத்தை ஊடுருவி வந்தது. வியப்படைந்து திரும்பிப் பார்த்தேன் ; காக்கை பேசுகிறது ! "ஓய், எடிடரே! என்னங்காணும், தீண்டாமை யொழியுங்கள்! ஒழியுங்க ளென்று பிறருக்குப் போதிக்கிறீர். பத்திரிகைகளில் என் தலையத் தனை பெரிதான எழுத்துக்களில் பதிப்பிக்கிறீர். நீரென்ன என்னைக் கண்டதும் பறையனைக் கண்டது போல ஓட்ட மெடுக்கிறீரே? நான் பறைக் காக்கை—அண்டங்காக்கை யென்ரு?" என்று கணீ ரென்று கல்லும் தேங்காயும் சந்தித்தாற் போல கேட்டதையா அக்காக்கை? நான் திகைப்புற்றேன். அந்தக் காலத்தில் ராட்சதர்க ளெல்லாம் தாம் நினைத்த உருவ மெடுத்துக் கொண்டது போல்; இக்காலத்திலும் சி. ஐ. டி. (C. I. D.) நரிகளில் ஒன்று இந்தக் காக்கை உருவெடுத்துக் கொண்டுதான் வந்துவிட்டதோ என்று ஓரெண்ண முதித்தது. 'போடா! மகாத்மா காந்தி உன் ஜன்மவிரோதி. துப்பாக் கியை முன்னிட்டுக் கொண்டு உன் மீது பாய்ந்தாலும், நீ மார்பை விரித்துத் துப்பாக்கியோடு மோதிக் கொள்ள வேண்டு மென்றல் லவோ போதிக்கின்ருர். எனில், அவர் சிஷ்யனென டமாரமடித்துக் கொள்ளும் யான் இந்த சி. ஐ. டி. காக்கைக்கோ கலங்குவது?" என்று உள்ளத்தை உறுதிப் படுத்திக்கொண்டு ஆண் ஏறு நடப்பது போல் வெகு 'ஜோராய்'க் காகத்தின் பக்கத்தில் போனேன்.

ஹா! என்னே! அக்காகம் தன் சிறு பனங்கா யனைய தலையை என் தோள்மீது வைத்துத் தடவிக்கொடுத்தது. இதனாலும், அதன் கண்களில் ததும்பிய ஒருவகை ஒளியாலும் என் மனத்திடை உத் ஸாகமும் அக்காகத்திடம் நம்பிக்கையும் உதித்தன.

"எடிடரே" என்றக்காகம் இம்முறை புகன்றதும் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றுகூறி பாரதியார் எவ்வளவு ஆநந்த மடைந்தாரோ அவ்வளவு ஆநந்தத்தை எனக்கு மளித்தது!

"நான் இப்போது கூறப் போவதை யெல்லாம் பத்திரிகை களுக்கு அறிவித்துப் பிரசுரிக்கச் செய்வீரா?" என்று எடுத்த வுடனேயே அக்காகம் என்னிடம் கேட்ட உறுதிமொழி என்னைச் சிறிது திடுக்கிடச்செய்தது. என்றுலும், அங்ஙனமே ஆகட்டு மென்று கூறுவது போல என் தலை என்னைக் கேட்காமலே அதிகப் பிரசங்கித் தனமாய் அசைந்து சம்மத மளித்துவிட்டது! அதுவோ மனிதரோடு உறவாடாத காகம். அதன் ஊர் பெயர் வரலாறு இன்னும் எனக்கு விளக்கமாகவில்லை. இதற்குள் அது கேட்ட படி வாக்குறுதி கொடுத்து விட்டது தவறுதான் என்று வாசகர்களே!

நீங்களே ஒப்புக் கொள்வீர்கள். நிற்க, அடுத்து அக்காக்கை, " வைக்கம் சத்தியாக்ரக மென்று காங்கிரஸ்காரர் செய்து வருவதெல்லாம் வீண் " கிண்டல் " தானே ? புரளி தானே ? " என்று என் கண்ணோடு கண் நாட்டிக்கேட்டது. முதலில் கேட்ட வாக்குறுதியைத் தான் சமாளித்து விட்டேனென்றால், இந்த கேள்வி லீஜ் கோட்டையை ஜர்மன்காரன் குண்டு போட்டுத் தகர்த்த மாதிரியாக, என் மனதைத் திடீரென்று தகர்க்கலாயினதால் சமாளிக்க முடியாது ஐந்து நிமிஷம் வரை சித்திரப் பதுமை போல் ஸ்தம்பித்து நின்று விட்டேன்.

காகம் தன் பவளவாயைப் பளிச்செனக் காட்டிப் புன்னகை பூத்து, " ஐயா, ஏன் தயங்குகிறீர் ? சரி, விஷயத்தை விளக்கமாகத் தெரிந்துகொண்டு பதில் விடுப்பீரோ ? கேளுமையா கேளும் ! என் சரித்திரத்தையும் கேளும் ! எனக்குக் கடந்த ஆனியோடு இருபத்தொரு வயதாகிறது. நானே என் குலத்தில் மிக முதியோனும் முக்கியஸ்தனு மாதலால் எனக்கு ஜாம்பவான் என்று புனைபெயர் இடப் பட்டிருக்கிறது.—என் குலமாவதென்ன ? அண்டங்காக்கைகளென்னும் சண்டாளர் குலமே ! அறிவிலும், ஒழுக்கத்திலும், நாகரீகத்திலும் முதிர்ந்தவரென்று பறையறைந்து கொள்ளும் மானிடர்களாகிய உங்களுக்குள்ளேயே பல ஜாதிப் பிரிவுகளும், பேதங்களும், கொடுமைகளும் காணப் படுகின்றனவெனில், எங்களிடமும் அவை காணப்படுகின்றன வென்றால் நீர் வியப்படைய மாட்டீர். அந்தோ ! அக்கொடுமையை ஏன் கேட்கிறீர் ? சொன்னால் எனக்கு வெட்கமும் துக்கமும் உமக்குச் சிரிப்பும் விநோதமுமாயிருக்கும். ஹோ ! மணிக்காக்கைகளென்றும் பாப்பாரக் காக்கைகளென்றும் நீங்கள் அழைக்கிற கூட்டத்தாரால் அண்டங்காக்கைகளாகிய நாங்கள் படும் பாடு சொல்லி முடியாது " என்றதும் நான் அக்காகத்தின் கண்களில் சில கண்ணீர்த் திவலைகள் தோன்றக் கண்டேன். உடனே என் கண்ணும் கலங்கி விட்டது. " எல்லாம் மானிடப்பதர்களாகிய நீங்கள் காட்டிக் கொடுத்தது தான் !" என்று ஜாம்பவான் எரிமலை மீண்டும் தீ மூண்டு கொண்டது போல் திடீரென்று கோபத்தோடு கூவினன். "பத்து வருஷங்கள் முன் இந்த விபரீத ஜாதி பேதத்தையும், கொடுமைகளையும் நான் காணவில்லையே. இப்போது தானே சில வருஷங்களாய் அவை பேய் போல் தலை விரித்தாடுகின்றன. பிணமாயினுஞ் சரி, அந்தணர்கள் யாகத்தில் இடும் பிண்டச் சோறாயினுஞ் சரி இந்த மணிக்காக்கைகள் உண்டு மிஞ்சியதையே நாங்கள் உண்ண வேண்டுமாம். குட்டை குளங்களில் அப் பாப்பாரக் காகங்கள் குளித்துச் சென்ற பிறகே நாங்கள் குளிக்கக் கூடுமாம். சில குறித்த குட்டை குளங்களை நாம் நெருங்கவும் கூடாதாம். அழகிய தோப்புத் துறவுகளும், உத்யான வனங்களும் பாப்பாரக் காக்கைகளுக்கென ரிஸர்வ் செய்யப்பட்டு விட்டதாம். யார் அவைகளை அவர்களுக்கு மானியம் விட்டார்களோ ? நாங்கள் பனந்தோப்புகளிலும், பட்டமரங்களிலும் குப்பை மேடுகளிலுந் தான் குடியிருக்கலாமாம். பள்ளிக்கூடங்

களுக்கு முன்பு மணிக்காக்கை அண்டங்காக்கை என்ற பேதமின்றி சிறுவர்கள் போய்ப் படித்துவந்தார்கள். இப்போதோ நாங்கள் எங்கள் சிறுவர் சிறுமியர்க்கெனத் தனிப் பள்ளி போட்டுக்கொள்ள வேண்டுமாம். அதற்காகும் செலவை நாங்களே பணஞ் சேர்த்து ஏற்கவேண்டுமாம். நாங்கள் நாட்டாண்மைக்காரனிடம் பொது நலத்திற்கெனச் செலுத்தும் வரிப் பணத்தை இப்பள்ளிக்கூடம் முதலான எங்கள் முன்னேற்றத்திற்குரிய சாதனங்களுக்கென்று உபயோகிக்கக் கூடாதாம். அந்தோ! நாங்கள் ஏமாந்து போய் ஒரு மணிக்காக்கையை நாட்டாண்மைக்காரனுகத் தேர்ந்தமர்த்தி விட்டு இஞ்சி தின்ற குரங்கெனப் பஞ்சரித்துக்கொண் டிருக்கிருேம். அவனே மணிக்காகங்கள் குல்லாய் போட்டுத் தம்மிஷ்டப் படி ஆட்டி வருகிருர்கள். திக்கற்றவருக்குத் தெய்வமே துணை யென்று நாங்கள் பொறுமையாகக் கஷ்டங்களை அனுபவித்து வந்தோம். ஆனுல் எங்களுள் இளைஞர்களோ பொறுமை யிழந்து மணிக்காகங்களுடன் வலுச் சண்டையிட்டு நூற்றுக் கணக்காய்ச் சிறைசென்று வருகிருர்கள். என்குலத்தவருள் மிக்க முதியோனும் அனுபோகமுள்ளவனுமாகிய யான் நெடு நாளாக விமோசனத்திற்கு வழி யாதோவென்று கவலைகொண்டு யோசித்து வந்தேன். எளியோர்களையும், எம்போல் இழிக்கப் பட்ட குலத்தவரையும் தடுத்தாட் கொள்ள வந்த அவதார புருஷரெனத்தக்க மகாத்மா காந்தி உபதேசித்தபடி திருவாங்கூர் வைக்கமா நகரில் தீண்டாதவரெனத் தள்ளி வைக்கப் பட்டவர்கள் நடத்தி வரும் சத்தியாக்ரகத்தைப் பற்றிக் கேள்விப் பட்டேன். ஒரு வாரத்திற்கு முன் தான் அங்கு ஓடோடியும் சென்றேன். புலையர்களும், தீயர்களும், ஈழுவர்களும் நடத்தும் புனித இயக்கத்தைக் கண் பூக்கும் வரை கண்டு கிருதார்த்த ஞனேன். ஹா! என்னே காட்சி! நாற்புறமும் கண்ணெட்டியவரை வெள்ளம் சூழ்ந்து நிற்கின்றது. நடுவே வைக்கத்தப்பன் கோயில் கோபுரமும் நிமிர்ந்து நிற்கின்றது. காலைச் சூரியன் தனக்கும் ரசவாத வித்தை தெரியுமெனக் காட்ட முனைந்தவன் போல் சுற்று முற்று முள்ள நீர்ப்பரப்பையெல்லாம் பத்தரைமாற்றுத் தங்கமென ஒளிவிடச் செய்து வருகிருன். 'எடிடரே'! கவனியும்? அந்நீர்ப்பரப்பில் அச்சூரியன் பிம்பம் கண் வைத்த இடமெல்லாம் காணக்கிடக்கிறது. இவ்வளவு நிம்மதியிடையில் மகாத்மா காந்திகி ஜே என்பது முதலான கோஷங்கள் திடீரென்று வீரிட்டெழுந்து நாற்றிசையும் பரவுகின்றன. ஹா! தொண்டர்கள் வருகிருர்கள்! தலையில் ராட்டினம், முகத்தில் ஒளி, வணக்கம், மார்பு மட்டும் ஜலம்! நீர்ப்பரப்பை மத்தகஜம் போல் நடந்து கிழித்துக்கொண்டு நான்கு பெயர் முன்னேறுகிருர்கள். மரமும், மட்டையும், கல்லும், மண்ணும் சரமாரியாக அவர்மீது பொழிகின்றன. ஹா! அக்காலத்திலோ ராமபிரான் போன்ற போர்வீரர்களின் திறத்தை மெச்சிப் பூமாரியும், ஆநந்தபாஷ்பமும் பெய்தார்கள் தேவதைகள் விண்ணுலகினின்று. இப்போதோ மண்மேட்டில் நின்று போலீஸ் தேவதைகளும் வைதீக ஹிந்துக்களும்

மண்மாரியும் கல்மாரியும், வசைமாரியும் பொழிந்தவா திருந்த னர். நாய் குரைப்பதையும், தன்மீது மேகங்கள் மோதுவ தையும், கன மழை பொழிவதையும் கவனியாது மலைகள் பல முன் னேறு வதுபோல் கட்டமைந்த கருத்த சரீரிகளாகிய தீயர்கள் சில ரும், புலையர்கள் சிலரும் அலட்சியமாய் முன்னேறியவா திருந்தனர். அவர்களுள் ஒருவர் கால் தவறி ராட்டினத்தைதன் மீதே போட்டுக் கொண்டு நீரிடை ஆழ்ந்தார். மற்றொருவர் கன்னத்தைச் சில கற்கள் சன்னலாய்த் துளைத்து விட்டன. என்றாலும் அவர்கள் முன்னேற் றம் தடைப் படவில்லை. இதே மாதிரியான காட்சி நான் மூன்று நாள் வரை கண்டேன். உண்மையான சத்தியாக்ரகம் இதுவேயென விண்டேன். இத்தகைய தெய்வீகக் காட்சியைக்காணப் புளகாங்கித மடைந்து மெய் மறந்து கண்களினின்று நீர் தாரை தாரையாகத் தவழ்ந்து செல்லலாயிற்று. இந்நிலையில் ஐந்து நிமிஷங்க ளிருந் திருப்பேனோ, என்னமோ, அதற்குள் என் உடலத்திலும் தண்ணீர் தவழ்வது உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன்; என் உட லினுங் கரிய மேகங்கள் ஆகாயத்தில் பயங்கரமாக ஒன்றோடொன் றெதிர்த்து நிற்கின்றன. ஆகாய மண்டலத்தின் விளிம்புகளில் கர்ஜனைகளும், கண்ணைப் பளிக்கும் மின்னல்களும் நேர்ந்தவாறிருக் கின்றன. சூரியன் முண்டி முண்டிப் பார்த்தும் தன்முகத்தை வெளிக்காட்டக் கூடாமல் சில கிரணங்களை மாத்திரம் மேகங்க ளிடையே செலுத்தி அவற்றை அழகுபடுத்தி விளங்குகிறான். ஹோ! மழை வலுத்து விட்டது. அப்பா மேகங்கள் கற்களைத்தான் வருஷிக்கின்றனவோ எனும் படியான கனத்த நீர்த்துளிகளைப் பஞ்சுபோல் மிருதுவான எனது உச்சந்தலை மீது உக்கிரமாய்ச் சொரிந்து மூளை கலங்க வடிக்கின்றன. இந்த ஸ்திதியில் நான் எங்கே சென்று அடைக்கலம் புகலாமென்று சுற்று முற்றும் நோக்கினேன். சிறிதுநேர முன் என் கண் முன்னர் தீண்டாமை கொண்டாடிக் கொண்டு போர்செய்த வைதீக பிராமணர்களும், நாயர்களும், பட் டர்களும், போலீஸ் சேவகர்களும், சில முஸல்மான்களும் சத்தியா க்ரகிகளான தீயர்களும், புலையர்களும் மண்ணிலும், சேற்றிலும், இடுப்பளவு ஜலத்திலும் உருட்டி யடித்துக்கொண்டு சிண்டுகளைத் தீர்த்த மாடச் செய்து கோயிற் படிகளில் சூறைத்தேங்காய் அடிபடு வதுபோல் ஒருவரோடொருவர் மண்டைகளை முட்டிக்கொண்டு இடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். சரி, எனக்கும் அதுதான் வழி என்று நானும் அவர்களைப் பின் பற்றி யோடினேன். ஒரு கோயிலில் சிறியவாயிலுள்ளே மொத்தமாய்ப் போய் எல்லாரும் விழுந்தனர். தீயர்களும், புலையர்களும், முகம்மதியர்களும் மட்டும் கோயில் வாயி னின் ஓரத்திலேயே நின்று விட்டனர். என்றாலும் ஹா! 'எடிடரே'! கடவுளின் திருவுளம் வேறு மாதிரியாக விருந்தது. அந்த வைக்கத் தப்பன் புலையர் குலதிலகனும் நந்தனுருக்கு நிலைபத மளித்த சிதம்பர நாதருடைய பிரதிபிம்ப மாதலால், தீயர்களையும், புலையர்களையும், பிராமணர்களையும், முஸல்மான்களையும் தோள் தழுவி நிற்கச் செய்து,

தன் திவ்விய சந்நிதி முன்பு ஜாதி மத வித்தியாச மென்பதில்லை என்று உலகத்தோருக்கு உணர்த்து விக்க விரும்பினன் போலும்! அரை மணி நேரத்தில் பெய்த மழை தெருவிலோடிய நீர் ஆறுபோற் பெருகிக் கோயிலுள் புகுந்து தூர ஒதுங்கி நின்ற "தீண்டத் தகாதார்" என்பவரைக் கர்ப்பகிருகத்திற் கருகே தூரத்தியடித்து விட்டது!! இதை நான் கண்ணுறக் கண் டேனெனினும், கனவு தானோ என்று கண்களைப் பிசைந்து கொண்டிருந்தேன். மனம் ஆநந்தத்தில் மூழ்கிக் கிடந்தது.

ஹா! 'எடிடரே'! அந்த ஆநந்தந்தான் நீடித்து நிற்கலாகாதா? "ஆசைப்பட்டேன் ஊசிப்போச்சு" என்ற கதையாக முடிந்தது இதுவும். வைக்கத்தப்பன் சந்நிதானத்திலேயே ஜாதிச் சண்டையும், மேல்ஜாதியாரின் வசைச் சொற்களும் வெகு மும்முரமாயிருந்தன. 'ஐயோ! பிராயச்சித்தம்' செய்துகொள்ளவேணுமே என் ஜன்மம் வீணய்விட்டதே!" என்ெருரு ஜன்மி மூக்காலே புலம்புகிருர். மற்ெருரு உச்சிக்குடுமி நாயர் "கலி முற்றியே போய்விட்டது; இதில் சந்தேகமில்லை' என்று ஓலமிடுகிருர். சத்தியாக்ரகிகளுக்கு சுவாமி பிரசாதத்திற்குப் பதிலாக அடிகளும் உதைகளும் வாங்கப் பட்டன. இந்தக் காட்சி திடீரென்று என் மனதில் கோர எண்ணங் களைப் புகுத்திவிட்டது. பார்க்கச் சகியாமல் இமைகளை இறுக மூட்டிக்கொண்டு கோயில் கோபுரத்தின் பொந்தொன்றில் புகுந்து படுத்து விட்டேன். உடம்பு கதகத வென்று சுடவாரம்பித்துவிட்டது. ஜலதோஷமும், தலைவலியும் ஒருங்கே பிடித்துக் கொண்டன. மழையில் நனைந்ததுடன் மனமும் துயருற் றிருந்ததால் காய்ச்சலே எனக்கு வந்து விட்டது. எடிடரே! நான் காய்ச்சலாய்க்கிடந்த எட்டு நாட்களிலும் பயாஸ்கோப் (Bioscope) படக் காட்சியில் உருவங்கள் வந்து போகிறுற் போல எவ்வளவு எண்ணங்கள் வந்து போயின என்பதைக் கூறிமுடியாது. இத்தகைய ராக்ஷஸ மனப் பான்மை படைத்த ஹிந்துக்களைச் சத்தியாக்ரகத்தால் திருப்பமுடியு மென்பது வீண் கேலிக் கூத்தாக எனக்குத் தோன்றியது. அந்த சத்தியாக்ரகத்தில் நம்பிக்கை வைத்துள்ள மகாத்மா காந்தியை நான் என்ன வென்றுகூறுவது என்று புரியவில்லை. ஹிந்துக்களெல்லாம் மறுஜன்மம் எடுத்தாலன்றித் தீண்டாமைப் பேய் அவர்களை விடுவது அரிதே என்று எண்ணலானேன். குளிக்க வந்து சேற்றைப் பூசிக் கொண்ட விதமாக, இத்தகைய குலத்தை ஈடேற்ற எண்ணினேன் என்று எனக்கே அவமானமாயிருந்தது. திருவாங்கூர் தர்மராஜன் வைக்கத்தப்பன் 'அடிநிழலை யடைந்து விட்டதாகத் தீண்டாத சத்தியாக்ரகிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்டதாகவும் கேள்வி யுற்றேன். 'கடித்த பாக்கு கொடாத சிற்றப்பன் கடைத் தெருவிலே வழி விட்டானும்' என்ற முதுமொழிக் கிணங்க, இக்கூற்றுல் மேல் ஜாதி ஹிந்துகள் தீண்டாமையைப் பற்றிய தம்பிடிவாதத்தை அணுவளவேனும் நழுவ விட்டதற் கறிகுறியாகக் கொள்ள முடியுமா?

என்று நான் கேட்கிறேன் உம்மை, எடிடரே! என்று என் முகத்துள் உற்று நோக்கிக்" கேட்டது காக்கை.

"முடியாதுதான்" என்று கூறினேன் நான்.

"பின், நீங்கள் வைக்கத்தில் நடத்திக்கொண்டிருக்கிறதெல்லாம் வீண் 'ஹம்பக்' (Humbug) தானே?"

பனையேறி விழுந்தவனைக் கடா வேறி மிதித்ததாக என்னை இக் கேள்வி நிலைகுலைத்துத் தூக்கிப் போட்டு விட்டது. "என்ன, என்ன?" என்றேன்.

"கோயிலைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களிலும் தீண்டாதவர் நுழைந்து விட்டால் தீண்டாமையே தீக்கிரையாகி விட்டதாக எண்ணமா? காங்கிரஸ்காரரே! இப்போது செய்து வருகிறதுபோல மூவாயிரம் வருஷங்கள் செய்து கொண்டு வாருமே; தீண்டாமை தீர்ந்துவிடுமென்று தீர்மானிக்க முடியுமா? தீண்டாமை ஹிந்துக்களுடைய ரத்தத்திலே ஊறி விட்டது! மதத்திலே சேர்ந்துவிட்டது!! எனக்கென்னமோ இந்த சத்தியாக்ரகத்தாலே, காந்திமுறையாலே தீண்டாமையை ஒழிக்கமுடியுமென்று நம்பிக்கை சிறிதுமில்லை. எதிரிடையாக, உம்மைப் போன்ற காங்கிரஸ்காரர்களின் முயற்சியால் மேல்ஜாதி ஹிந்துக்களுக்குத் தீண்டாதவரிடம் முன்னைவிட அதிக ஆத்திரமும் வெறுப்பு மேற்படுமென்றே நான் கூறுவேன். மன்னிக்கவேணும், எடிடரே! இவ்விஷயத்தைப் பற்றி, ஒரு நாளில்லை, இரண்டு நாளில்லை எட்டுநாள் யோசித்திருக்கிறேன். கால சக்கரந் தான் நமது உதவிக்கு வரவேண்டும், கடவுள் தான் வழி விடவேண்டும். பாரும், 'எடிடரே'! வடக்கே தீண்டாமை அதிகமாயிருக்கிறதா? ஜாதித் துவேஷம் தலைவிரித்தாடுகிறதா? சென்னை, திருச்சிராப்பள்ளி போன்ற பெரும் பட்டணங்களில் தீண்டாமைப் பிரச்னையுண்டோ? இல்லை, இல்லை. என்ன காரணம்? முகம்மதியர், வெள்ளையர் முதலானோரால் ராஜாங்க மாறுதல்களாலும், ரயில் வண்டி, கப்பல், டிராம் வண்டி முதலிய வசதிகளாலும் தீண்டாமை சிறிது சிறிதாக ஒழிந்து வருகிறது. சென்னையில் எத்தனை பிராமணர்கள் பறையர்களைத் தம் வண்டியோட்டுவோராய் அமர்த்திக்கொண்டிருக்கிறார்கள்! எத்தனை வேளாளர்களும். வைதீக ஹிந்துக்களும், பறையர்களுடன் தினந்தோறும் தோளொடு தோள் உராய்ந்துகொண்டு செல்கின்றனர்! இச்செயல்களெல்லாம் அவர்கள் மனத்தில் தைப்பதில்லையே. கால தேச வர்த்தமானங்கள் செய்து வைக்கிற விளையாடல்களுக்கு ஒரெல்லையுமுண்டோ? இப்போது பட்டணங்களில் தீண்டாமை போய் விட்டது. இப்படியே சிறிது காலஞ் சென்றால் கிராமங்களிலும் தீண்டாமைக்கு "காடுவா, வீடு போ" என்ன வாரம்பித்து விடும். இதற்காக, நான் காங்கிரஸ்

காரர்கள் தமது தீண்டாமையொழிக்கும் பிரசாரத்தைக் கட்டித் தூர வைத்துவிட வேண்டுமென்று கூறவில்லை. அவர்களும் தம்வேலையை மனந்தளராது நடத்திக் கொண்டு போக வேண்டியது தான். ஆனால், சத்தியாக்கிரகம் இமாலய உச்சியிலிருந்து கொண்டுவந்த ஒருமகா அற்புத மூலிகையென்றும் அதைக் கையாண்ட மாத்திரத்தில் தீண்டாமைப் பிணி சில தினங்களில் மறைந்துபோய் விடுமென்றும் நம்ப வேண்டாம், பிறர்க்கும் கூறவேண்டாம். கடவுள் தான் வெள்ளம், பூகம்பம், பஞ்சம் முதலிய பல உபாயங்களால் ஹிந்துக்களுக்கு சீக்கிரம் நல்ல புத்தி வர வழி செய்யக் கூடும்! காலத்தால் ஆகாததொன்று முண்டோ? எடிடரே?"

"ஆமாமாம், அக்காலம்தானே கடவுள்!" என்று கூறி விட்டு என் புத்திசாலித்தனத்தை நானே மெச்சிக் கொண்டேன். "குட் நைட்," மற்றொரு தரம் பார்க்கிறேன். இதை மாத்திரம் "நீங்கள் பத்திரிகையில் போடாவிட்டால்?" என்று சிறிது கோபத்தோடு என்னை நோக்கியது அக் காகம்.

நான் சிரித்தேன். அவ்வளவு தான். காகமும் அந்தி இருட்டில் மறைந்துவிட்டது.

முயற்சி செய்வரோ?

தமிழர் இயக்கம் ஒன்று ஏன் தோற்றுவிக்கக் கூடாதென்று நமக்குத் தெரியவில்லை. சாதி வேற்றுமையையும், சமயக் கோட்பாடுகளையும், மொழி முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் முயற்சியில் கொண்டு புகுத்துவது அறியாமையாம். தமிழ் மொழியைத் தம் தாய்மொழியாகக் கொள்ள எவருக்கும் உரிமை உண்டு. காலஞ்சென்ற பெஸ்கி பாதிரியையும், போப்பையரையும் தமிழர் என்றே நாம் கூறுவோம். அவர் தமிழுக்காக உழைத்த அளவு இப்பொழுது எத்தனை தமிழர் உழைக்கின்றார் என்று நாம் அறிய விரும்புகிறோம். தமிழ்மொழியின் தற்கால நிலையைப்பற்றி இங்கு நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. தெருக்களிலும் பிற சாலைகளிலும் காணப்படும் தமிழ் விளம்பரங்களைக் கொண்டே, தமிழின் தற்கால நிலை புலனாகும். சிரோன்மணிகளும் நாகரீகர்களும்'!—கொடுமை! எத்தனை புலவர்! எத்தனை பண்டிதர்! குஜிலிக்கடை புத்தகங்களும், நாவல்களும் தமிழ் மொழிக்கு ஆபரணங்களாய் விளங்குகின்றன. இவைகளை நினைக்கும்போது, உருகாத தமிழர் உள்ளம் இருக்கிறதேயென்று நாம் விசனியாமலிருக்க முடியவில்லை. தமிழ் நாட்டார், இனியேனும் தமிழ் மகாநாடு கூட்ட முந்துவார்களா? இதற்குமுன் இரண்டொரு மகாநாடுகள் கூடி அவை இதுகாலை சமாதிநிலையி லிருக்கின்றன என்பதை நாம் அறியாமலில்லை. அவைகளேனும் எழுமோ?

நவசக்தி.

லீலாவதி

ஸ்ரீமாந் தி. ரா. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் எழுதியது.

(இரண்டாம் மலர் 90-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம் 3.

துர்மரண விசாரணை.

வெளியூர்களில் உள்ளோர் "தினவர்த்தமானி" பத்திரிகையில் வெளி வந்த "உத்தமர் கோயில் படு கொலை" விஷயத்தைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் (மேமீ 22உ செவ்வாய்க்கிழமை காலை பத்துமணி சுமாருக்கு) உத்தமர் கோயில் போலீஸ் ஸ்டேஷனில் நூற்றுக் கணக்காய் ஜனங்கள் குழுமியிருந்தனர். ஏன்? அப்பொழுதே அநியாயமாய்க் கொலையுண்டிறந்த எதிராஜுலுவின் துர்மரண விசாரணை. நியாயாதிபதியாய் விளங்கிய துர்மரண விசாரணைத் தலைவர் ஒரு உன்னத ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவ்வூரிலுள்ள பிரபலஸ்தர் பலரும் அவரருகே தனித் தனி நாற்காலிகளில் வீற்றிருந்தனர். ஆனால் அங்கு வரதராஜுலு காணப் படவில்லை. யாவரும் விசாரணை தொடங்கும் காலத்தை ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர். சரியாய் மணி பத்து அடித்ததும் விசாரணை ஆரம்பமாயிற்று. முதன் முதலாகப் பிரேத பரிசீலனை செய்த டாக்டர் ராகவன் பின் வருமாறு வாக்கு மூலங் கொடுத்தார். "நேற்று இரவு சுமார் 7-மணிக்கு நான் சவப் பரிசோதனைக்கான ஆயுதங்களுடன் கொலை யுண்டிறந்த எதிராஜுலுவின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு அவர் சவம் கிடத்தியிருப்பதைப் பார்த்து மனம் கலங்கினேன். பின்பு நான் பிரேதத்தைப் பரிக்ஷை செய்ததில் அவர் தமது தலையில் யாரோ பலமுறையும் பலமாக அடித்துஅதனால் ஏற்பட்ட காயங்களாலேயே இறந்தார் என்ற முடிவுக்கு வந்தேன். அன்றியும் அக்காயங்களெல்லாம் பயங்கரமானவையாயும், இடது பக்கமே பெரும்பான்மையாயும் காணப் பட்டன. அடித்த அடிகளால் இடது பக்கத்திய கழுத்தெலும்பு ஒடிந்து போயிருந்தது. இவ்வளவே நான் அறிய முடிந்தது." இவ்வாறு சொல்லி முடிந்ததும் முறையே ஏகாம்பரம், கொலையுண்டு இறப்பதற்கு முன் அவரைப் பார்த்த குடியானவஸ்திரீ, முருகன், காமாட்சி ஆகிய இவர்கள் விசாரிக்கப் பட்டனர். இவர்கள் மொழிந்த யாவும் முன்னதிகாரத்தில் குறிப்பிட்டவைகளே. கடைசியாக, ரெங்கராஜு கூப்பிடப் பட்டு சாட்சிக் கூண்டில் கொணர்ந்து நிறுத்தப் பட்டான். அவனது வாக்கு மூலத்தைக் கேட்க அனைவரும்

ஆவலுள்ள வராயிருந்தனர். அவன் இக்கொலையைப் பற்றி யாது சொல்லப் போகிருனே என்ற அடக்க முடியாத ஆசை மேலீட்டால் அவன் வாயைக் கூர்ந்து கவனித்த வண்ணம் அனைவரும் விளங்கினர். எங்கும் நிசப்தம் நிலவிற்று. ரெங்கராஜுவின் முகம் களங்கமின்றிப் பிரகாசித்தது. அவனை அப்பொழுது பார்த்த எவரும் அவனை நிரப ராதி என்று சொல்லப் பின் வாங்கி யிருக்க மாட்டார்கள். இரண் டொரு நிமிடங்களுக் கெல்லாம் அவன் கீழ்க் காணுமாறு கூற லுற்ருன்.

"இறந்து போன எனது பிதாவை நான் எவ்வளவு தூரம் நேசித்தேன் என்பது அனைவரும் அறிந்த விஷயம். சந்தர்ப்ப சாட்சியங்கள் இருந்த நிலைமையில் நானே எனது பிதாவைக் கொன் றதாகக் கைது செய்யப் படுவேன் என்பதை நான் ஒவ்வொரு நிமிட மும் எதிர் பார்த்த வண்ணமாகத் தானிருந்தேன். அவ்வாறே போலீ சாரும் என்னைச் சந்தேகித்துக் கைது செய்தனர். இருந்தாலும், உண்மையான குற்றவாளியைக் கடவுள் காட்டிக் கொடாமல் இரார் என்ற முழு நம்பிக்கையோடும் நான் இருக்கின்றேன். நிற்க, சுமார் ஒரு மாத காலமாக நான் ஊரில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த் விஷயம். தேசிய இயக்கப் பிரசார நிமித்தமாக வெளியேறி யிருந்த நான் நேற்று மாலை மூன்று மணி சுமாருக்கே வீடு திரும்பி னேன். அப்பொழுது எனது பிதா வீட்டில் இல்லை. அவர் வெளி யில் எங்கோ சென்றிருக்கிருர் என்று நினைத்தேன். சில நிமிடங்கள் கழிந்ததும் நான் பொழுது போக்கு நிமித்தம் என் கைத்துப்பாக்கி யையும் எடுத்துக் கொண்டு வயல் வெளியைச் சார்ந்த தோட்டத்திற் குச் செல்லலானேன். போகும் போது வழியில், என் தந்தையின் பிரிய நண்பரான வரதராஜலுவின் வீட்டு வேலைக்காரனில் ஒருவனை முருகன் எனக்கு எதிர்ப்புற மிருந்து வருவதை (அவன் தனது வாக்கு மூலத்தில் கூறிய படியே) நோக்கினேன். சில விநாடிகளில் அவன் என்னைத் தாண்டி அப்பால் சென்று விட்டான். அவன் நான் எனது தந்தையை அச்சமயம் தொடர்ந்து செல்லுவதாகத் தான் கருதியதாகக் கூறியது தவறு. ஏனெனில், அப்பொழுது என் தந்தை எனக்குச் சற்று தூரத்தில் சென்று கொண்டிருந்தாரென்பதை நான் அறியவில்லை. அவ்வாறு கருத எனக்குக் காரணமும் ஏதும் இருக்க வில்லை. ஆகவேதான் சாதாரணமாகவே மேலும் சென்றேன். இன்னும் பள்ளத்தாக்கான இடம் நூறு அடி தூரமே யிருக்கலாம். அச்சமையம் "பாபு" என்று யாரோ கூப்பிடுவதைக் கேட்டேன். அது என் தந்தையின் குரல் போலு மிருந்தது. அன்றியும் அவர் தான் அப்பதத்தை என்னை அழைக்கும் போது உபயோகிப்பது வழக்கம். எனவே நான் துரிதமாய் அச்சத்தம் வந்த இடமாகிய பள்ளத் தாக்கான பூமியைக் குறித்து நடந்தேன். சீக்கிரமே, குட்டை யின் சமீபம் எனது தந்தை நிற்பதைக்கண்டு அவரை யணுகினேன். என்னை அச்சமயம் காண அவர் சந்தோஷ மடைவதற்குப் பதி

லாகப் பெரும் வியப்பு எய்தினர். என்னை அவர் அப்பொழுது சற்றும் எதிர்பாராதவரா யிருந்தார் என்பதை அவர் முகக் குறிகளின் னின்றும் அறிந்தேன். பின்பு அவர் என்னை நான் அச்சமயம் அங்கு எதன் பொருட்டு வந்தேன் என்பதையும், எப்பொழுது ஊரி லிருந்து வந்தேன் என்பதையும் வினவினர். அதற்கு நான் பதி லளித்ததும் எங்களிருவருக்கும் இடையே சில நிமிடங்கள் சம்பா ஷணை நடந்தேறியது. அவர் என்னிடம் நான் செய்ய விரும்பாத வொரு காரியத்தைச் சொல்லி அதை அவசியம் நான் செய்தே தீர வேண்டும் என வற்புறுத்தினர். நான் மறுத்ததை உணர்ந்த அவர் என்னை வாயில் வந்த விதம் திட்டத் தொடங்கினர். எங்கு அவர் கோபம் முதிர்ந்து அதனல் ஏதேனும் தீங்குகள் விளையுமோ என்று பயந்த நான் மெல்ல அவரை விட்டு நீங்கி வீடு நோக்கித் திரும்பிச் செல்லலானேன். சுமார் நூறு கஜ தூரம் சென்றிருப்பேன் என நினைக்கின்றேன். அவ்விநாடியே எனக்குப் பின்னல் குட்டைக் கருகிலிருந்து—எனது தந்தையிட்ட பயங்கரமான கூச்சலைக்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பி அவ்விடம் நோக்கி ஓடினேன். அந்தோ! அங்கு நான் கண்ட காட்சி என் மனதைப் பிளந்துவிட்டது. அங்கு குட்டைக் கருகில் புல் தரையின் பேரில் எனது தந்தை அலங்கோல மாய் விழுந்திருந்ததையும், அவர் தலையில் பலமான காயங்கள் ஏற் பட்டு இரத்தம் குபு, குபு, என்று பொங்கி வெளியே வழிந்து கொண்டிருந்ததையும் பார்த்ததும் எனது ஆவி சோர்ந்து குலை நடுக்க மெடுத்தது. சுற்றுமுற்றும் நான் பார்த்தேன். ஆனல் ஒருவரும் காணப் படவில்லை. எனது தந்தை பலமான மூர்ச்சையுற்றிருந்தார். சுவாசம் மிகவும் மெதுவாக வந்து கொண்டிருந்தது. அவர் இனி பிழைக்க மாட்டாரென்று தோன்றவே நான் மிகுந்த விசனத்திற் குள்ளானேன். எனக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. அந்தோ! என் அருமைத் தந்தையை இழப்பதென்றல்..................நான் எப்படி மனம் சகித்துக் கொண்டிருப்பேன்? அவரைத் தவிர எனக்கு இவ்வுலகத்தில் எவர் இருக்கின்றார் என்று சிறிது நினைத்துப் பார்க்க வும் என் மனம் படீரென வெடித்து விடும் போலிருந்தது. உடனே நான் என் கைத்துப்பாக்கியை அப்புறம் எறிந்து விட்டு இரத்தம் தாராளமாய்க் கசிந்து கொண்டிருந்த அவரது தலையை என் மடி மீது தூக்கி வைத்துக் கொண்டு கண்களில் நீர் துளித்தேன். ஆனல், அந்தோ! மறு நிமிடமே எனது தந்தை உயிர் துறந்தார். அவர் ஆவி பிரிந்த சற்று நேரம் வரைக்கும் எனக்கு ஒன்றுமே தோன்றமல் அவரது சவத் தருகில் அழுத வண்ணமிருந்தேன். மறு நிமிடம் எவ ருடைய உதவியேனும் அச்சமயம் பெற வேண்டும் என்று கருதி, வேலப்பன் குடிசை அருகி லிருந்ததால் அவனைக் கூட்டிக் கொண்டு வர ஓடினேன். மற்ற விஷயங்களெல்லாம் எவரும் அறிந்ததே'' என்று மிகுந்த வருத்தத்தோடு கூறி நிறுத்தினன். பின்பு அவனைக் கீழ்க் காணுமாறு நீதிபதி சில கேள்விகள் கேட்கத் தொடங்கினர்.

நீதிபதி :—நீ கூறியவை இருக்கட்டும். உன் பிதாவின் மரணத் தருவாய்க் கூச்சலைக் கேட்டு நீ ஓடி வந்து பார்த்த பொழுது அங்கு ஒருவரும் இல்லையோ ?

ரெங்கராஜு.—இல்லை. என் பிதா ஒருவரே அங்கு தமது சாகுந் தருவாயில் பலமாய் அடி பட்டு விழுந்து கிடந்தார்.

நீதி :—அவர் தலையில் பலத்த காயங்கள் உண்டாய் இருந்தன வென்று கூறினாயே. அவைகள் எவரால் உண்டாக்கப் பட்டிருக்க லாம் என்று நீ நினைக்கிறாய் ? அதாவது, அவருக்கு எவரேனும் விரோதியுண்டோ ?

ரெங்கா :—இல்லை. நான் அறிந்த வரையில் அவருக்கு ஒருவரும் விரோதிகள் கிடையாது. எனது தந்தை அதிகமாக எவருடனும் பழக்கம் வைத்துக் கொள்ளுகிறதில்லை. அவ்வாறு நான் ஒருவரையும் சந்தேகிக்கவும் முடியாது.

நீதி :—சரி. உனது தந்தை தாம் இறப்பதற்கு முன் ஏதாவது உன்னிடம் கூறினாரா ?

ரெங்கா :—ஆம், ஏதோ சில வார்த்தைகளைப் பேசவே முயன் றார். ஆனால் அவைகள் தெளிவாக இராமையால் நான் ஒன்றும் அறிய இயலவில்லை. அவர் மொழிந்த வற்றினின்றும் நான் தெரிந்து கொள்ள முடிந்த தெல்லாங் கூடி " தலை " என்பதே யாகும்.

நீதி :—உனது தந்தை இவ்வாறு சொல்லினதின் கருத்தைப் பற்றி நீ என்ன சிந்திக்கிறாய் ?

ரெங்கா :—ஏன், அது எனக்கு ஒன்றையும் விளக்கவில்லை. அவர் மரிக்குந் தருவாயில் ஏதோ பிதத்தினதாகவே அதை நான் நினைக்கிறேன், ஒரு வேளை, படுகாயப் படுத்தப் பட்ட தலையைக் குறித்து அவ்வாறு சொல்லியு மிருக்கலாம்.

நீதி :—அது கிடக்கட்டும், கடைசித் தடவையாக நீயும் உனது தந்தையும் எதைக் குறித்து பலத்த விவாதம் செய்தீர்கள் என்பதை இயம்பக் கூடுமோ ?

ரெங்கா :—நான் இக்கேள்விக்கு மறுமொழி யளிக்க விரும்ப வில்லை.

நீதி :—நீ அதற்கு விடையளிக்க வேண்டியது மிகவும் அவசிய மானது. அவ்வாறு நீ செய்ய வேண்டுமாய்ப் பல வந்தமாய்க் கேட்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு என்பதை நீ அறிந்திருப்பாய் எனவே எண்ணுகின்றேன்.

ரெங்கா :—ஆம், அது எனக்குத் தெரிந்தே யிருக்கிறது. இருந்தாலும் அதற்கு விடை மறுக்க முடியா தென்பதை நான் மறுபடியும் கூறுகிறேன். ஆனால் ஒன்று மட்டும் நான் உறுதியாய்ச் சொல்லக்கூடும். அதாவது நான் கூற மறுக்கும் இவ்விஷயத்திற்கும், பின்னால் நேரிட்ட படு கொலைக்கும் சிறிதும் சம்பந்தம் கிடையாது என்பதே.

நீதி :—இக்கொலைக்குச் சம்பந்தமானதோ அல்லது இல்லையோ என்பதைக் கோர்ட்டார் தீர்மானிப்பதற்கு விட்டு விட வேண்டும். அவ்வுரிமை அவர்களுக்கே யுண்டு. இதை நீ மறைப்பதானால் பின்னால் நடக்க விருக்கும் விசாரணை உனக்குப் பிரதி கூலமாகவே முடியும் என்பதை நீ முன்னாலேயே தெரிந்து கொள்ளுவது நல்லது என்று கருதுகின்றேன்.

ரெங்கா :—எது எப்படி முடிந்த போதிலும் நான் அதை வெளியிட முடியாததற்காக மிகவும் வருந்துகின்றேன்.

நீதி :—சரி, அது போகட்டும். "பாபு" என்று உன்னைத் தான் உனது தந்தை கூப்பிடுவது வழக்கமோ ?

ரெங்கா :—அதுதான் என்னைப் பரிவுடன் என் பிதா அழைக்கும் போது உபயோகிக்கும் பதம்.

நீதி :—அப்படியானால் நீ ஊரில் இல்லை யென்று உன் பிதா நன்கறிவார். நீ அப்பொழுதே ஊருக்குத் திரும்பி வந்திருக்கிறாய் என்பதையோ அவர் அறியமாட்டார். இவ்வாறு இருக்க அவர் அப்பதம் கொண்டு அழைப்பதானால் அதன் கருத்து என்ன ?

ரெங்கா :—(மிகுந்த குழப்பத்துடன்) அது தான் எனக்குத் தெரியவில்லை.

நீதி :—சரி, உன் தந்தையார் போட்ட கூக்குரலைக் கேட்டு உடனே நீ அவ்விடம் சென்று அடித்து வீழ்த்தப் பட்டுக் கிடந்த உன் பிதாவைக் கண்டதாகக் கூறினாயே. அச்சமையம் சமீபத்தில் நடந்தேறிய கொலைக்குச் சம்பந்தமாய் நீ சந்தேகிக்கும்படி ஏதேனும் இருந்ததோ ?

ரெங்கா :—அவ்வாறு ஒன்றும் இருந்ததாய் உறுதியாய்க் கூற முடியாது.

நீதி :—நீ சொல்வதன் பொருள் என்ன என்பதைச் சொல்லக் கூடுமோ ?

ரெங்கா :—எனது தந்தையின் கலவரமான கூச்சலைக் கேட்டு அவருக்கு என்னவோ ஏதோ என்று ஓடிய நான் அவர் அவ்வாறு அலங்கோலமாய் வீழ்ந்து கிடந்ததைக் கண்டதும் எனக்கு ஒன்றுமே

தோன்ற வில்லை யாதலால், அச்சமையம் வேறு எதையும் கவனிக்க வில்லை. இருந்தாலும், எனது தந்தையை வேகமாய் நெருங்கிய அப்பொழுது எனக்கு இடது பக்கத்தில் தரையின் பேரில் ஏதோ பழுப்பு வர்ணமான சால்வை யொன்று கிடந்தது போன்ற ஞாபகம் இருக்கின்றது. ஆனால் எனது பிதா இறந்த பின்பு அதன் நினைவு வந்து அதற்காகப் பார்த்த பொழுது அதை அவ்விடத்தில்—ஏன்? எவ்விடத்திலும்—நான் காண முடியவில்லை.

நீதி :—அப்படியானால் நீ கூறுவது, நீ உதவிக்காக வேலப்பன் குடிசைக்குச் செல்ல நினைத்ததற்கு முன்பே அது காணமற் போயிருந்தது என்று?

ரெங்க :—ஆம், அவ்வாறே நான் கூறுவது.

நீதி :—உன் தகப்பனார் வீழ்ந்து கிடந்த இடத்திற்கும் அதற்கும் எவ்வளவு தூரம் இருந்திருக்கலாம் என்பதை உத்தேசமாக வேனும் சொல்லமுடியுமோ?

ரெங்க :—பத்து அல்லது பன்னிரண்டு அடி தூர மிருந்திருக்க லாம்.

நீதி :—அப்படியானால் நீ கூறுவதினின்றும் அச்சால்வை உனக்கு மிகவும் சமீபத்திலேயே இருந்தது என்பது அறியக் கிடக்கின்றது. அவ்வாறிருந்தும் உன்னையறியாமலே அது மறைந்து விட்டிருக்கிறது என்பது ஏற்படுகிறதல்லவா?

ரெங்க :—ஆம், அப்படியே தான் நடந்திருக்கிறது. நான் என் பிதாவண்டை யிருக்கும் போது என் பின் புறத்தில் கிடந்த அதை நான் அறியாதபடி யாரோ வந்து எடுத்துக் கொண்டு போய் விட்டிருக்கிறார்கள்.

நீதி :—சரி, இவ்வளவே நான் தெரிந்துகொள்ள வேண்டியது.

இவ்வாறு தாம் கேட்க வேண்டியவற்றைக் கேட்டு முடிந்ததும், நீதிபதி பின் வருமாறு தீர்ப்பளித்தார் :—

"இவ்வழக்கு சம்பந்தமாக அறிய வேண்டியவைகளைக் கூடிய மட்டில் தெளிவாகத் தெரிந்துகொண்டு விட்ட போதிலும், கொலை யுண்டிறந்த எதிராஜலுவின் புதல்வரான ரெங்கராஜுவின் வாக்கு மூலமும், கேள்விகளுக்கு விடைகளும் முன்னுக்குப் பின் முரண்படுவதான அநேக விஷயங்களைப் புலப்படுத்துகின்றன. தமது மகனைக் காணுதிருக்கும் பொழுதும், அவன் ஊரில் இல்லையென்று நிச்சய மாய் அறிந்திருக்கும் பொழுதும், தமது மகனையே குறித்துக் கூப் பிடும் சொல்லாகிய "பாபு" என்பதை இறந்து போன எதிராஜலு

அச்சமையம் ஏன் உபயோகப் படுத்தி யிருக்க வேண்டும் என்பது செவ்வையாய் விளங்கவில்லை. அன்றியும், தனக்கும் தன் தந்தைக் கும் நிகழ்ந்த வாக்குவாதம் எதைக் குறித்து என்பதைக் கூற மறுப்ப தால் தனக்குத் தானே தீங்கு தேடிக்கொள்ளுவதை ரெங்கராஜு அறியாதிருப்பதைக் குறித்துப் பெரிதும் வருந்துகின்றேன். கடைசி யாக, தனது தந்தை மரிக்குந் தருவாயில் கூறியவற்றில் "தலை" என்பதை மட்டுமே தான் அறிந்து கொள்ள முடிந்தது என்று அவன் சொல்லுவதினின்றும் ஏதும் அறிய இயலவில்லை. ஆகவே, சந்தர்ப்ப சாட்சியங்கள் அவனுக்கு மிகவும் விரோதமா யிருப்பது கருதியும், கொலைக்கு நெருங்கிய சம்பந்த முள்ளன வென்று கோர்ட் டார் கருதும் சில விஷயங்களை அவன் கூற மறுப்பது நோக்கியும், அவனை நான் குற்றவாளி யெனவே கருத வேண்டி யிருக்கிறது. அடுத்த மாதம் இக்கொலை விசாரணை ஜில்லா செஷன்ஸ் நீதி ஸ்தலத் தில் நடந் தேறுமளவும் அவன் சிறையிலேயே இருக்க வேண்டும் என நான் கட்டளை யிடுகின்றேன்.'' இம்மாதிரி கூறிவிட்டு நியாயாதி பதி தமது ஆசனத்தில் அமர்ந்தார், மறு நிமிஷமே செந்தலைப் புலி களில் பலர் ரெங்கராஜுவைக் காவலோடும் சிறைச்சாலைக்கு இட்டுச் செல்ல ஆயததமாயினர். அவ்விடத்தில் கூடியிருந்த ஜனங்க ளிடையே ஒரு விதமான பரபரப்பும், நீதிபதியின் தீர்மானத்தில் அதிருப்தியும ஏற்பட்டன. ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அங்கு எவரும் காணப் படவில்லை. இவ்வாறு தனயனுக்கு விரோதமாகவே தந்தையின் கொலையைப் பற்றிய தீர்மரண விசாரணையும் நடந் தேறியது.

*　　*　　*　　*　　*

மாளிகையில் தனது அறையில் லீலாவதி விசனமே உருவாக உட்கார்ந்திருந்தாள். தன் காதலனுக்கு விரோதமாக நிறை வேறிய தீர்மரண விசாரணையைப் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து மனங் கலங்கியவளாய் அவள் அவ்வாறு வீற்றிருந்தாள். சில நிமிடங்கள் வரை தன்னையே மறந்த படி உட்கார்ந்திருந்த அவள் அறைக்கு வெளியில் யாரோ வருவதால் ஏற்பட்ட காலடிச் சப்தம் கேட்ட வுடன் உணர்வு திரும்பியவளாய், வருபவர் யாரென அறிய ஆவலோ டும் நிமிர்ந்தாள். மறு விநாடி, கட்டைக் குட்டையான ஒருவர் புன் முறுவலுடனும் அறைக்குள் நுழைந்தார். அவரை அன்போடும் அருகிலிருந்த நாற்காலி யொன்றில் உட்காரும்படி அவள் கேட்டுக் கொண்டாள். சில நிமிடங்கள் மௌனத்தில் கழிந்தன. பின்பு புதிதாக அவ்வாறு வந்தவரே பேசத் தொடங்கி "தாங்கள் இன்று நிகழ்ந்தேறிய விசாரணையின் முடிவை அறிந்திருப்பீர் களெனவே எண்ணுகிறேன். விஷயங்கள் இருக்கும் நிலைமையில் உண்மையை அறிவது என்பது என்னவோ சிரமசாத்தியமான விஷயமே. சந் தர்ப்ப சாட்சியங்களையே முற்றும் நம்பி அவைகளுக் கிணங்கத் தீர்ப்பளித்த தீர்மரண விசாரணைத் தலைவரது செய்கை ஆச்சரி யத்தை விளைவிக்கக் கூடிய தன்று. எதற்கும் நான் ஒருவனே இதில்

தலையிட்டு உழைப்பதைக் காட்டிலும்,'' என்று மேலும் ஏதோ மெதுவாக அக்கன்னிகைக்கு மட்டுமே கேட்கும் படியாகச் சொல்லி முடித்து விட்டுத் தமது ஆசனத்தில் சாய்ந்த வண்ணம் தமக்கு எதிரிலிருந்த அவ்வனிதையின் முகக் குறியை ஆவலுடனும் உற்று நோக்கினார். உடனே அம்மங்கையின் பொலிவிழந்த வதனத்தில் நம்பிக்கைத் தோற்றம் காணப் பட்டது. மறுவிநாடி அவள் அம்மனிதர் கூறிய விதம் மேஜையினருகே நகர்ந்து ஏதோ எழுதி முடித்தாள். மறு நிமிடம் எழுதி முடித்து உறையிலிடப் பட்ட அக்கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வந்தனமளித்தவராய் அம்மனிதர் விடை பெற்று வெளியேகினார். இவ்வாறு லீலாவதியிடம் வந்தவர் இராஜவடிவேல் என்ற துப்பறிபவராவர். இவர் அநேக சிக்கலான வழக்குகளில் தலையிட்டுக் கொண்டு உண்மையைக் கண்டு பிடித்துப் பெயர் பெற்றிருந்தார். அப்பொழுது லீலாவதியின் வேண்டுகோளுக் கிணங்கி, அவள் காதலன் சம்பந்தப் பட்ட இக்கொலைக் கேசில் உழைக்க ஏற்றுக்கொண்டிருக்கிறார். [தொடரும்.]

குறிப்பு.—ரெங்கராஜு என்பது இராஜகோபாலுவின் வேறு பெயரேயாகும். பற்பல காரணங்கள் கருதி, இனி இந் நவீனம் முடிவு பெறும் வரையில் அவனை இவ்வாறே அழைப்போம்.

தமிழ்.

ஒவ்வொரு மொழியினரும் பாஷாபி விருத்திக்காகப் பெருமுயற்சிகள் செய்து வருகின்றனர். தமிழ் தொன்மைசால் மொழியென்றும், அது பண்டை நாளில் சீரும் சிறப்பும் பெற்றிருந்ததென்றும், பல மொழிகள் இதனின்றும் பிரிந்தனவென்றும் நாம் பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ் நாட்டாராகிய நாம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இது காறும் என்ன செய்திருக்கிறோம் என்பதே எமது கேள்வி. இதை நினைக்கும்போது, நாம் தலை குனிந்து நிற்க வேண்டியவரே யாகிறோம். சமீபத்தில் வடநாட்டில் ஹிந்தி மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதன் நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வெளியிடப்பட் டிருக்கின்றன. அதைக் கண்ணுறும் போது, தமிழ் மகா நாடு கூடி மொழி வளர்ச்சிக்கான முயற்சிகளைச் செய்யுமோ என்றும் எம் உள்ளம் ஏங்குகிறது. சாதிச் சண்டையிலும் சமயச் சண்டையிலும் வீறிட்டெழுந்து நிற்கும் தமிழ்நாடு, மொழி முன்னேற்றத்திற்காகச் சிறிதளவேனும் முயற்சி செய்யாதா? ஹிந்தி மொழியிலேயே, நகரபரிபாலன சங்கங்களின் நடவடிக்கைகள் நடைபெறவேண்டு மென்றும் ஹிந்தி மொழியிலேயே இந்திய சரித்திரம் ஒன்று எழுதப் பட வேண்டுமென்றும் சில தீர்மானங்கள் ஹிந்தி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இத்தகைய துறைகளில் நம் தமிழ் நாடும் முன்னேற்றம் அடைய வேண்டியிருக்கிறது. (ந.ச.)



துர்க்கா தேவி ஆலயம், காசி.



சாரநாத் : புத்தர் பகவான் தமது உபதேசங்களை முதல் முதல் செய்வதற்கிடமாக விளங்கிய மான் (**DEER PARK**) தோட்ட மிதுவே.

நமது சிற்பம்

[பரலி சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் எழுதியது.]

நமது பாரத நாடு இன்று சீரும் செல்வமும் இழந்து தேசங்களுக் குள்ளே வறுமையும் சிறுமையும் நிறைந்த நாடாய் விட்டபோதிலும், பல வகைச் செல்வங்களிலும் வேத ஆராய்ச்சி முதல் வித்து நடுதல் ஈருக வுள்ள சகல கலைகளிலும், நமது தாய் நாடே முற்காலத்தில் தலைசிறந்து விளங்கியது. அறுபத்தி நான்கு கலைகளுக்கும் பிறப்பிடம். நமது தாய் நா டென்பதே அறிஞர்கள் முடிவு.

நமது சிற்ப வேலைகள் பூலோகத்திலுள்ள மக்களுக் கெல்லாம் வியப்பை யளிப்பன. மொகாலய மன்னனுன ஷாஜஹான் சக்ரவர்த்தி தனது காதலியான மும்தஸ் மஹாலின் ஞாபகத்தை நிலை நிறுத்தும்பொருட்டுப் பெரும் பொருள் செலவிட்டுக் கட்டிய தாஜ் மஹால் என்னும் விசித்திரக் கட்டடம் உலகத்தி லுள்ள விசித்திரங்களுள் ஒன்ருகக் கருதப் படுகிறது. ஆக்ராவில் யமுனை நதிக் கரையில் இன்றுதான் கட்டி முடிந்ததுபோல என்றும் புதிதாக விளங்கும் தாஜ் மஹால் உலகத்தார் அனைவரும் வியந்து கொண்டாடுவதா யிருக்கிறது. அதனைப் புவிராயர் போற்றுகின்றனர். கவிராயர் பாடுகின்றனர். இந்திர லோகத்து மாளிகை ஒன்று இந்த நாட்டுக்கு இறங்கிவந்து விட்டதுபோல அது விந்தையாக விளங்குகிறது. முப்பது லட்சம் ரூபாய் செலவிட்டு முப்பது ஆண்டுகளாக மிகவும் திறமை வாய்ந்த சிற்பிகளைக் கொண்டு கட்டி முடித்த இந்த அற்புதக் கட்டடத்தைப் போல இப்பொழுது முப்பதுகோடி ரூபாய் செலவழித்தாலும் கட்டமுடியாது.

இந்தியா விலுள்ள பிரமாண்டமான தேவாலயங்களும், விசித்திரமான கட்டடங்களும் அதிசயமான குகைகளும், அற்புதமான கல்வெட்டுகளும்| உலகத்தார் இன்றும் என்றும் வியக்கத் தக்கனவாய் விளங்குகின்றன. இந்திய சிற்ப சாஸ்திரத்தின் பெருமை தென்னுட்டுக்கே உரியது. தாஜ் மஹாலும் எல்லோராக் குகைகளும் இன்னும் வேறு சில அதிசயங்களும் வடநாட்டில் இருப்பினும் நமது அற்புத சிற்ப சாஸ்திரத்தின் அருமையையும் பெருமையையும் விளக்கும்|பிரமாண்டமான தேவாலயங்களைக் கொண்டு விளங்கும் தலைமையான பெருமை தமிழ்நாட்டுக்கேஉரியது.

தமிழ்நாட்டி லுள்ளவை போன்ற பெருந் தேவாலயங்கள் வட நாட்டிலே கிடையாது. பூலோகத்தில் வேறெங்குமே கிடையாது. ஞாலமெல்லாம் போற்றும் ஆலயங்களுக்குப்பேர்போனது சீல மிகுந்த நமது தமிழ் நாடே யாகும். தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்களை யெல்லாம் கோடிக் கணக்கான பொருள் செலவிட்டுக் கட்டிமுடித்துத் தமிழ் நாட்டிற்கு பெரும் புகழை உண்டுபண்ணிச் சென்றவர்கள் வென்றி மிகுந்த நமது தமிழ் மன்னர்கள். பாரத தேசத்துச் சிற்பத்துக்கு உலகத்திலே தலைமை ஸ்தானம் அளித்துச் சென்றவர்கள் அறிவும் திறமையும் சிறந்து விளங்கிய நமது தமிழ்ச் சிற்பிகளே யாவர். தன்னிழல் தன்னிடமே நிற்கும் அற்புதப் பெருமை வாய்ந்த தஞ்சாவூர்க் கோபுரத்தையும் ஜெயங்கொண்ட சோழபுரத்துக் கோபுரத்தையும் கட்டி முடித்து அந்நிய நாட்டார் இந்தியச் சிற்பிகளின் திறமையை வியந்து கன்னத்திலே கைவைத்து நிற்குமாறு செய்து சென்றவர்கள் தமிழ் மன்னர்கள் செங்கோல் செலுத்திய அந்தக் காலத்தில் விளங்கிய நமது தமிழ்ச் சிற்பிகளே யாவர்.

தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்களிலும், விஷ்ணுவாலயங்களிலும் விளங்கும் அற்புத வேலைப்பாடுகளெல்லாம் செய்து வைத்தவர்கள் தமிழ்ச் சிற்பிகளே. இந்தியாவுக்கு வரும் லோக சஞ்சாரிகளான ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் தென்னுட்டிலுள்ள நமது தேவாலயங்களின் அற்புதமான வேலைப்பாட்டைக் கண்டு களித்தலை ஒரு முக்கிய கடமையாகக் கொண்டிருக்கிறுர்கள். மதுரை முதலிய இடங்களி லுள்ள தேவாலயங்களில் இந்தக் காட்சியை இன்றும் காணலாம். நமது நாட்டுச் சிற்ப ஆராய்ச்சிக்காகவே தங்கள் வாழ்நாளைச் செலவிடும் ஐரோப்பிய அறிஞர்களும் இருக்கிறுர்கள்.

சிற்ப சாஸ்திரத்தின் பெருமையை உலகத்திற்கு விளக்கிக் காட்டிச் சென்ற அறிஞர்களின் சந்ததியாய் வந்த தற்காலச் சிற்பிகள் அம்மி செய்வதிலும் ஆட்டுரல் செய்வதிலுமே தங்கள் திறமையைக் காட்ட வேண்டியவர்களாயிருக்கிறுர்கள். நமது சிற்பம் அநேகமாய் அழிந்து போய் விட்டது. சிற்பத்தின் அற்புதமகிமையை மதிக்கக்கூடியவர்கள் நாட்டிலே குறைந்து வருகிறுர்கள். நமது நாட்டிலுள்ள

தேவாலயங்களின் அருமையையும் பெருமையையும் அந்நிய நாட்டார் பல்லாயிரம் மைலுக் கப்பாலிருந்து பெரும் பொருள் செலவிட்டு வந்துகண்டு களிக்கிறார்கள். ஆனால் நம்மவர்களுக்கு நமது தேவாலயங்களிலுள்ள அற்புதமான மகிமைகளைக் கண்டுக் களிக்கக்கண் இல்லை. நமது முன்னோர்கள் வீணகச் செலவு செய்து, இந்தக் கட்டடங்களைக் கட்டி வைத்து விட்டுப் போயிருக்கிறார்களென்று ஆங்கிலம் படித்த நாகரிகர்கள் கருதுகின்றார்கள். நமது சிற்ப சாஸ்திரத்தின் மகிமையையும், நமது சிற்பிகளின் திறமையையும், தங்கள் நாட்டு மக்களுக்கு விளக்குவதற்காக அந்நிய நாட்டார்கள் நமது நாட்டிலிருந்த அருமையான விக்ரகங்களில் பலவற்றைக் கப்பலேற்றிக்கொண்டு போய்விட்டார்கள். லண்டன் கண்காட்சி சாலையிலும் பெர்லின் கண்காட்சி சாலையிலும் நமது தெய்வ விக்ரகங்கள் போய் நமது சிற்ப சாஸ்திரத்தின் பெருமையை விளக்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நம்மவர்களோ சிற்பத்தை மதிக்கும் உணர்ச்சியையே நாளடைவில் இழந்து வருகிறார்கள்.

நமது நாட்டுச் சிற்ப சாஸ்திரப் பெருமை நமது நாகரீகத்தின் மகிமையை என்றும் விளக்கிக் கொண்டிருக்கிறது. சிற்பம் சித்திரம் முதலிய பல கலைகளிலும் தலைமையுற்று, நாகரிகத்தில் உச்சஸ்தானம் பெற்று விளங்கிய முன்னோர்களின் சந்ததியாரான நாம் தற்காலத்தில் சுயராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களென்று மூன்றாம் நாள் தோன்றிய அந்நியர்கள் கூறுகிறார்கள் !

சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய சகல கலைகளையும் நாம் இழந்து விட்டோம். சகல கலைகளுக்கும் பிறப்பிடமாயும், சகல கலைகளையும் பிறர்க்கு அளித்ததுமான பாரத தேசத்தில் பிறக்கும் பாக்கியம் பெற்ற நாம் நமது சுதந்தரத்தை இழந்த பின்னர் சகல நலங்களையும் நாளடைவில் இழந்து, வறுமையும் சிறுமையுமே பெரிய உடைமைகளாக இப்பொழுது கொண்டிருக்கிறோம். நாம் இழந்த கலைகளையெல்லாம் மீட்டும் பெற்றாலே நாம் நமது நாகரிகத்தை மீட்டும் அடைந்தவர்களாவோம். ஆனால் எது ஒன்றை இழந்ததால் மற்றவை அனைத்தையும் நாம் இழக்க நேர்ந்ததோ அதனை முதலில் அடைந்தால் தான் மற்றவைகளை உயிர்ப்பிக்க முடியும். அது சுதந்தரமே யாகும். சுயராஜ்யமே எல்லாக் குறைகளுக்கும் ஒரே மருந்து.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

(இரண்டாம் மலர் 94-ம் பக்கத் தொடர்ச்சி.)

வெள்ளை யானையின்மீது திருக் கயிலையைச் சேர்ந்தது.

கொங்குநாட்டுக்கு மேற்றிசையிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்துக் கானகமும் கான்யாறுங் கற்சுரமுங் கடந்து மலைநாட்டகத்துப் புகுந்தனர் அடியேன் மனத்தகத்துட் புகுந்த வள்ளலாம் நாவலூர்ப் பெருமான். பெருமான் வருகின்றார், முதலை வாயினின்றும் பிள்ளையை மீட்டு வருகின்றார், என அடியவர் கூறக் கேட்ட சேரர் பெருமான்—

"செய்வ தொன்று மறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்தென்
ஐயன் அணைந்தான் ; எனையாளும்
அண்ணல் அணைந்தான் ; ஆரூரிற்
சைவன் அணைந்தான் ; என் துணையார்ந்
தலைவன் அணைந்தான் ; தரணியெலாம்
உய்ய அணைந்தான் அணைந்தான் ; என்
றோகை முரசஞ் சாற்றுவித்தார்."

தமது நகரை அலங்கரித்துப் பெரியோர்களுடன் புறப்பட்டுப் போய் ஆரூரரை எதிரேற்று வணங்க ஆரூரரும் இவரைத் தொழ இருவரும் பேரின்ப முற்றனர். சேரரும் ஆரூரரை யானையின் மீதேற்றித் தாம் அவருக்கு வெண்குடை பிடித்தபடியே ஊர்கோலம் வந்து தமது மாளிகைக்கு அவரை அழைத்துச் சென்றனர். ஆரூரர் அங்குப் பலநாள் இருந்து மலைநாட்டுத் தலங்களை வணங்கித் திருவஞ்சைக்களத் தமர்ந்தனர். அங்ஙனம் அமரு நாளில் ஒருநாள் சேரர் பெருமான் மஞ்சன மாடிக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஆரூரர் திருக்கோயிலுக்குச் சென்று ஈசனை

வணங்கித் தாம் பண்டு கயிலையி லிருந்த நிலையிற்போய்ச் சேரும் நாள் குறுகினதை அறிந்து,

"வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங் குழைக் காதுடை வேதியனே
யிறுத்தா யிலங்கைக் கிறையா யவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தாய் கடல் நஞ்சமு துண்டு கண்டங்
கடுகப் பிரமன்தலை ஐந்திலு மொன்
றறுத்தாய் கடலங்கரை மேன்மகோளத்
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே"

என வரும் 4-ஆவது திருப்பதிகத்தைப் பாடி இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தேன் என விண்ணப்பஞ் செய்தனர். சிவபிரானும் பிரமன் முதலிய தேவர்களை நோக்கி நமது ஆரூரனை வெள்ளையானையின் மீதேற்றி இங்குக் கொண்டு வாருங்கள் எனக் கட்டளை யிட்டனர். அவ்வாறே, திரு வஞ்சைக் களத்துக் கோயிலின் வாயிலில் வெள்ளை யானை யுடன் அயன் முதல் தேவர்வந்து கூடி ஆரூரரைக் கண்டு சிவபிரான் கட்டளையைத் தெரிவிக்க அங்ஙனே வருகிறேன் எனக் கூறிச் சிவபிரானைப் பணிந்து எழுந்தார். தேவர் களும் தாம் கொண்டு வந்த வெள்ளையானையின் மீது நாவ லூரரை ஏற்றிச் சென்றனர்*. வானவர் பூ மழை பொழிந்த

---

* ஆரூரர் இம்மண்ணுலகை எங்ஙனம் நீத்துச் சென்றனர் என்பது அவர் திருவாய்மலர்ந்த "தானெனைமுன் படைத்தான்" என வரும் நொடித்தான்மலைத் தேவாரத்தினின்றும் ஒருவாறு அறியக் கிடக்கின்றது. "தானெனை முன்படைத்தான்" என்பது சிவபிரான் கண்ணாடி நிழலிற்றன் னுருவைக் கண்டு "சுந்தரா வா" என அழைக்க "ஆலால சுந்தரன்" என்னும் திருநாமத்துடன் தான் தோன்றினதைக் குறிக்கின்றது போலும், அப்பதிகத்தில் "ஊனுயிர் வேறு செய்தான்" என்பதன் பொருள் என்ன? பின்னர் 5-ஆவது பதிகத்தில் "வெள்ளை யானையின்மேல் என்னுடல் காட்டுவித்தான்" என்பதை "ஊனுயிர் வேறுசெய்தான்" என்பதனோடு பொருத்திப் பொருளுரைப்ப தெங்ஙனம்?—என்னும் இவ்வினாக்கள் ஆராயத் தக்கன.

தன்னை அழைத்துவரச்சொல்லி இறைவன் வானோர்க்குக் கட்டளையிட்டு வெள்ளையானையை அனுப்பிவைத்ததும், தேவர் குழாம் இவரை வலம்வந்து அந்த யானையின்மீது இவரை ஏற்றிச்சென்றதும், அந்த யானையின்மீது தனது உடலத்தை இறைவன் யாவருக்கும் காட்டுவித்ததும், இறவாமை என்னும் இன்பம் பெற்றதும், மலை

னர். அங்ஙனஞ் சென்ற ஆரூரர் சேரர் பெருமானை நினைந்து சென்றனர். இச்செய்தியை அறிந்த சேரர் பெருமான் அருகு நின்ற குதிரை மீதேறித் திருவஞ்சைக் களத்துக் கோயில் வாயிலுக்கு வர அங்கு வெள்ளை யானையின்மேல் ஆரூரர் விண்மிசைப் போவதைக் கண்டு உடனே தமது குதிரையின் காதிற் பஞ்சாக்ஷரத்தை ஓத அது விண் மிசை நடந்து தனக்கு முன் செல்லும் வெள்ளையானையை வலஞ்செய்து கயிலையை நோக்கி முன் சென்றது.

ஆரூரர் யானைமீது செல்லும்போது

"தானெனை முன்படைத்தா னதறிந்து தன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தா னொடித்தான் மலை யுத்தமனே."

எனவரும் (100-ஆவது) திருப்பதிகத்தைப் பாடிச் சென்று திருக்கயிலையின் தென்றிசை வாயிலை அணைந்தனர். அங்கு இறங்கித் தனக்கு முன்னமே வந்துள்ள சேரருடன் வெள்ளி யங்கிரியில் நடந்து இறைவன் ஆலயத்துக் கோபுரவாயிலரு கே வர அங்குள்ள காவலர்கள் சேரர்பெருமானை உள்ளே

மிடையே யானை ஏறிச் செல்லும்போது அலைகட லரையன் (வருண தேவன்) அலர்கொண்டு பூசித்து இவரைப் பணிந்ததும், திருமால் முதலிய தேவர்கள் யானைமீதேறிச் செல்லும் தன்னை எதிரேற்று உபசரித்ததும், முனிவர்கள் இவன் ஆர் என்று வினவ அதற்கு இறை வன் இவன், 'நமது சொந்தக்காரன் ஊரன்' என்றதும், தான் அச்சமயத்து ஓதிய இப்பதிகத்தை வருண தேவரால் திருவஞ்சைக் களத்துக்குச் சேரச் செய்தனரென்பதும், "தானெனை முன்படைத் தான்" என வரும் திருப்பதிகத்திலுள்ள கீழ்க்காட்டிய வாக்கியங்க ளால் ஏற்படுகின்றன :—

"நாயினேனைப் பொருட்படுத்து வான் எனைவந்து எதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து ;" "அமரர் வலஞ்செய்து எனை ஏறவைக்க ஆனையருள் புரிந்தான் ;" "அமரர் எல்லாம் சூழ அருள்புரிந்து ;" "வெள்ளை யானையின்மேல் என்னுடல் காட்டுவித்தான் ;" "தஞ்சு தல் மாற்றுவித்து ;", "மலையிடையானை யேறி வழியே வருவே னெதிரே, அலைகடலா லரையன் அலர்கொண்டு முன்வந்து இறைஞ்ச," "இந்திரன்மால் பிரமன் எழிலார் மிகுதேவரெல்லாம் வந்து எதிர்கொள்ள", "முனிவர் இவன் ஆர் என எம்பெருமான் நந்தமர் ஊரன் என்றான்", "ஏத்திய பத்தினையும் ஆழிகடல் அரையா அஞ்சை யப்பர்க் கறிவிப்பதே."

போகக்கூடாது என்று நிறுத்தி விட்டார்கள். நாவலூரார் மாத்திரம் உட்சென்று பல நாளாய்க் காணாது அலைந்த கன்று தன் தாயைக் கண்டதுபோலத் தமது நாதனைக் கண்டு மகிழ்ந்து போற்ற, சுவாமியும் "ஆரூரனே, வந்தாயா?" என்றனர். ஆரூராரும் "சுவாமி! நீங்கள் என்னைத் தடுத்தாட்கொண்ட கருணைக்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன்! அடியனு தங்கள் கருணையைப் பெறுந் தரமுள்ளவன்?" எனக்கூறி இன்பவெள்ளத்துள் திளைத்து நின்றனர். அங்ஙனம் நின்றவர் "சுவாமீ! உங்கள் திருவடி சேரச் சேரன் வாயிற் புறத்தி னிற்கின்ருன்" எனச் சுவாமியும் நந்தியை நோக்கி அவரைக் கொணர்க என அவரும் போய் அவ்வாறே கூப்பிடச் சேரர்பிரானும் நந்தியின் திருவடியை வணங்கி உள்ளேபோய்ச் சிவபிரானைக் கண்டு மகிழ்ந்து வணங்கித் தூரத்தே நின்றனர். சிவபிரான் புன்முறுவல் செய்து "இங்கு நாம் அழையாதபோது என் வந்தாய்" என்றனர். அதற்குச் சேரர் "சுவாமி, அடியேன் ஆரூரர் கழல் போற்றி அவர் ஏறிவந்த யானையை முன் சேவித்துத் தங்களது கருணை வெள்ளம் என்னை அடித்துக்கொண்டு வர இங்கு வரப் பெற்றேன். இனி ஒரு விண்ணப்பம் உண்டு. யான் தங்கள்மீது திருவுலா ஒன்று வெளியிற் காத்திருந்தபோது பாடினேன். அதனைச் செவியேற்றருளவேண்டும்; என் பாசம் அகல இவ்வன்றெண்டரது நட்பைத்தந்த பெருமுதலே!" என்றனர். ஈசனும் சொல்லுக எனச் சேரர்பெருமான் "திருக்கயிலாய *ஞான உலா" என்னும் "ஆதியுலா"வை இறைவன் சந்நிதியில் ஓதினர். உலாவைக் கேட்ட சுவாமியும் மகிழ்ந்து சேரரை நோக்கி ஆரூரனெனப்படும் இந்த ஆலால சுந்தரனுடன் நீங்கள் இருவீரும் நமது கணநாதராக அமருங்கள் என்று திருவாய் மலர்ந்தனர். ஆரூராரும் சேரரும் சிவபிரானைப் பணிந் தெழுந்தனர். ஆரூரர் ஆலால சுந்தரராகித் தாம் முன்பு செய்திருந்த நல்வினைத் தொழிலில் நின்றனர். சேரர்பெருமான் கண நாதராய் அதற் குரிய தொழிலைப் பூண்டனர்.

---

* ஞானவுலாவைக் கயிலையிற் பாடக் கேட்டிருந்த மாசாத்தனுர் என்பவரால் இம்மண்ணுலகில் திருப்பிடவூர் என்னும் தலத்தில் இவ்வுலா வெளியிடப்பட்டது.

பரவையாருஞ் சங்கிலியாரும் மண்மிசைப் போந்த வினைப்பந்தம் நீங்கப் பரமேசுரியின் திருவருளால் முன்பு போலக் கமலினியார், அநிந்திதையா ராகி மலைமகளுக்குத் தாம் முன்பு செய்துவந்த திருப்பணியை மேற்கொண்டனர்.

குறிப்பு:—ஷை சரித்திரம் சேக்கிழார் நாயனார் பாடிய பெரிய புராணத்தைப் பெரிதுந் தழுவி எழுதப்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறித்த சரித்திர விஷயங்கள் இன்னும் பல வுள. இவர் கூன் குருடு முதலிய நோயைத் தீர்த்ததாகத்

"தேனுங் குழலும் பிழைத்த திரு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாட்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன்"

எனச் சேக்கிழாரே குறிப்பித்துள்ளார். அன்றியும், விறன்மீண்ட நாயனார், சோமாசிமாற நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார் என்னும் நாயன்மார்களது சரித்திரங்களின் மூலமாகவும், பேரூர்ப்புராணம், அவிநாசிப்புராணம், துடிசைப்புராணம், திருமுருகன் பூண்டிப் புராணம் ஆதிய ஸ்தலபுராணங்கள் மூலமாகவும் சுவாமிகளது சரித்திர விஷயங்கள் பல அறியக் கிடக்கின்றன. அவையெலாம் விரிவஞ்சி விடப்பட்டன.

"மேவரிய பெருந்தவம்யான் முன்புவிளைத் தனவென்னோ
யாவதுபோர் பொருளல்லா என்மனத்து மன்றியே
நாவலர் காவலர் பெருகு நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினு மலர்ந்தனவாம்."

திருச்சிற்றம்பலம்.

சந்தா நேயர்களுக்கு!

நாம் விரும்பியபடி அயல்நாட்டுச் சந்தா நேயர்கள் யாவரும் இரண்டு புதிய நேயர்களை சேர்த்தனுப்பி யிருக்கிறார்கள். அவர்களை நாம் மனதார வாழ்த்துகிறோம். லக்ஷ்மியும் ஆசீர்வதிப்பாளாக.

தமிழ் நாட்டு நேயர்களில் சிலரே விண்ணப்பத்தை கவனித்திருக்கிறார்கள். ஆனால் சந்தாவைக் கூட்டும்படி அநேகர் எழுதியிருக்கின்றனர்: நாம் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. ஆனால் நாம் விரும்புவதெல்லாம் இரண்டு புதிய சந்தா நேயர்களே! உங்களால் முடியாத காரியமில்லை. மனந்தான் வேண்டும். இன்றே செய்யுங்கள். "லக்ஷ்மி"யின் சிறப்பு உங்கள் கையிலிருக்கிறதென்பதை மறந்து விடாதீர்கள்.

மானேஜர்.

அவுரங்கசீபின் இளமை

ஸ்ரீமான் வே. சாமிநாத சர்மா எழுதியது.

செல்வத்திலும், வீரத்திலும், நிருவாகத்திறமையிலும் உலகத்திலுள்ள எந்த அரசாங்கத்துடனும் ஒப்பிட முடியாதபடி சுமார் இரு நூறு ஆண்டுகள் மொகலாயருடைய ஆட்சி நிலவி வந்தது. மொகலாய அரசாங்கம் என்னும் சிறந்த கட்டடத்திற்கு கி. பி. 1526-ம் வருஷத்தில் பாபர் கால் நிறுவினன். அவனுடைய பேரனாகிய அக்பர் காலத்தில் இக்கட்டடம் முடிவு பெற்று பலருக்கு ஆதரவு அளித்து வந்ததோடு அனைவராலும் வியந்து பாராட்டப்படும் வண்ணம் அமைந்திருந்தது. பிறகு, அவுரங்கசீப் ஆட்சியின் இறுதியில் இக்கட்டடத்தின் அஸ்திவாரம் ஆடத்தொடங்கிய தென்று கூறலாம். மொகலாய அரசாங்கத்தை நாம் ஒரு கட்டடத்திற்கு ஒப்பிட்டது போலவே, இவ்வமிசத்து மன்னரில் பெரும்பாலோர் சிறந்த கட்டடங்களைக் கட்டுவதில் பிரியமுள்ளவரா யிருந்தனர். ஆனால் சிற்பமும் ஓவியமும் ஷாஜஹான் காலத்தில் பெற்ற ஆதரவைப்போல் அவுரங்கசீப் காலத்தில் பெறவில்லையென்று திண்ணமாகக் கூறலாம். மொகலாய வமிசத்தின் கடைசி திலகமாக விளங்கிய அவுரங்கசீப்பின் இளமையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

ஜிஹாங்கீர் தனக்கு விரோதமாக எழுந்த மலிக்அம்பரின் விரோதமான முயற்சிகளை அடக்கிவிட்டு குஜரத் மாகாணத்திலிருந்து ஆக்ராவுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது ஷாஜஹானும் அவன் குடும்பத்தாரும் சக்ரவர்த்தியுடன் வந்துகொண்டிருந்தார்கள். அச்சமயம் ஷாஜஹான் மனைவியாகிய மும்தாஜ் மஹால் பூரண கர்ப்பிணி. அரச குடும்பத்தார் ஆக்ராவை நோக்கிவந்து கொண்டிருக்கும்போது, தோஹத் என்ற ஊரில் (இஃது இப்பொழுது பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பஞ்சமஹால் ஜில்லாவில் இருக்கிறது) கி. பி. 1618-ம் வருஷம் அக்டோபர்மாதம் இருபத்துநான்காந்தேதி முஹைதீன் முகம்மது அவுரங்கசீப் பிறந்தான். ஊஜ்ஜயினி வந்து சேர்ந்ததும், அவுரங்கசீப் பிறந்ததை முன்னிட்டுச் சந்தோஷக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. அவுரங்கசீப், தன் கடைசிகாலம்வரை, தான்பிறந்த ஊரின்மீது அதிக அபிமானஞ் செலுத்திவந்தான் என்று தெரிகிறது. அவன், தன் குமாரனாகிய முகம்மது ஆசாமுக்கு எழுதும் ஒரு கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிருன் :—“சிறந்தமகனே! குஜரத் மாகாணத்திலுள்ள தோஹத் என்ற ஊரே, இந்தப்பாபியின் பிறப்பிடம். அவ்வூர் ஜனங்களை அன்புடன் நடத்தவேண்டுவது உனது கடமையாகும். அந்த இடத்து பௌஜ்தாராக அநேக காலம இருந்த அந்த வயோதிகனைச் சமாதானப்படுத்தி, அந்தப்பதவியிலேயே அவனை நியமிப்பாயாக.” இதனால் அவுரங்கசீப்பின் பிறப்பிடத்து அபிமானம் நன்கு புலனாகும்.

மொகலாய வமிசத்தைச்சேர்ந்த ஒவ்வொரு சக்ரவர்த்தியும், தன் வயோதிக காலத்தில், தன் புத்திரர்கள் தனக்கு விரோதமாகக் கிளம்புவதையோ, அல்லது அவர்களே ஒருவர்க்கொருவர் சச்சரவிட்டுக்

கொள்வதையோ காண்கிறன். 1622-ம் வருஷம் முதல், அரசுகட்டில் ஏறும்வரை, ஷாஜஹான் தன் பிதாவோடு பிணக்குக்கொண்டிருந்தான் என்றே கூறவேண்டும். நூர்ஜஹானுடைய செல்வாக்குக் குட்பட்டிருந்த ஜிஹாங்கீர், தன் குமாரனுடைய பட்டம் பதவி முதலிய அனைத்தையும் பிடுங்கிவிட்டான். ஷாஜஹான் கலகம் செய்தான். பயனில்லை. தட்சிணத்திற்கு ஓடினன். கடைசியில் தன் தகப்பனருக்குச் சரணடைவதைத்தவிர வேறு வழியில்லாமற் போய்விட்டது. நூர்ஜஹான் கட்டளைப்படி, தான் சரணடைந்ததற் குறியாகத் தன் குமாரர்களில் தாராவையும் அவுரங்கசீப்பையும் தன் தகப்பனரிடத்தில் அனுப்பினன். அப்பொழுது தாராவுக்கு பத்து வயது ; அவுரங்கசீப்புக்கு எட்டு வயது. இவர்களுடன் சுமார் பத்து லட்சம்ரூபா பெறுமான யானைகள், ஆயுதங்கள் முதலிய பலவகைப் பொருள்கள் அனுப்பப்பட்டன. தாராவும் அவுரங்கசீப்பும் லாகூரி லிருந்த ஜிஹாங்கீரை அடைந்து, நூர்ஜஹானின் போஷணையில் இருந்தார்கள். சிறிது காலங்கழித்து (28-10-1627) ஜீஹாங்கீர் இறந்துவிட்டான். ஷாஜஹான் சிம்மாசனம் ஏறினன். பிறகு, இவ்விரு அரசிளங் குமரர்களும் ஆக்ராவுக்கு அழைத்துவரப்பட்டார்கள். இவர்கள் வந்துசேர்ந்ததும், மும்தாஜ் மஹால் இவர்களைத் தழுவி உச்சிமோந்து கண்ணீர் பெருக்கினள். தாய் அன்பன்றே ?

பத்தாவது வயது முதற்கொண்டு அவுரங்கசீப்புக்கு அவன் செலவுகளுக்கென்று தினந்தோறும் ஐந்நூறு ரூபா கொடுக்கப்பட்டு வந்தது. இது முதல் அவனுக்கு வேண்டிய கல்விப்பயிற்சியும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவுரங்கசீப்புக்கு ஞாபக சக்தி அதிகம். விஷயங்களை விரைவில் கிரகிக்கும் ஆற்றலும் இருந்தது. குர்-ஆனும் நாயக வாக்கியங்களும் இவனுக்கு மனப்பாடமாயிருந்தன. அரபி பாஷையிலும் பாரசீக மொழியிலும் அவன் வல்லுநனுயிருந்தான். இவ்விரண்டு மொழிகளிலும் நன்கு பேசுவான் ; எழுதுவான். ஹிந்திபாஷையிலும் இவனுக்குச் சிறிது பயிற்சி இருந்ததாகத் தெரிகிறது. துருக்கி பாஷையிலும் இவன் புலமை பெற்றிருந்தான். அவுரங்கசீப்பின் கையெழுத்து மிக நன்றாயிருக்கும். குர்-ஆன் முழுவதையும் தன் கையால் எழுதி, இரண்டு பிரதிகள் தயாரித்து, அவைகளை நன்கு அலங்கரித்து ஒன்றை மெக்காவுக்கும் மற்றென்றை மதீனவுக்கும் அனுப்பினன். இதே மாதிரி பல பிரதிகள் தயாரித்து விலைக்கு விற்றான். தன் ஜீவனத்திற்குத் தான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டுமென்பது அவுரங்கசீப்பின் கொள்கை. ஆதலின் மதநூல்களை எழுதி விற்றும் குல்லாய்களைத் தைத்து விற்றும் இவைகளைக்கொண்டு தன் சாப்பாட்டுச் செலவை ஈடுபடுத்திக்கொண்டான். இவன் கையால் எழுதப்பட்ட குர்-ஆன் பிரதிகள் இப்பொழுதும் ஆங்காங்கு காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. வயதான பிறகு கூட, அவுரங்கசீப், ஒழிந்த நேரத்தில் அறிஞர்களுடன் சம்பாஷித்தும், அவர்களிடமிருந்து பல விஷயங்களை அறிந்தும் வந்தான் ; மத சம்பந்தமாக உள்ள அநேக நூல்களைப்படித்தான்.

அவுரங்கசீப்பின் இளமை

இங்ஙனம் படிப்பிலேயே இவன் அறிவு சென்றதால், பிற கலைகளில் இவன் அதிக ஆவல் காட்டவில்லைபோலும். ஓவியத்தையும் சங்கீதத்தையும் இவன் வெறுத்து வந்தான். அழகான கட்டடங்கள் கட்டுவதில் ஷாஜஹானுக்கு இருந்த ஆர்வத்தில் ஒரு சிறு அமிசம் கூட இவனிடத்தில் இல்லை. இவன் எழுப்பிய கட்டடங்களைக்கொண்டே இது புலனாகும்.

சாதுல்லாகானிடத்திலும், மீர்முகம்மது ஹாஷிமிடத்திலும் பயின்று வந்த அவுரங்கசீப் சுறுசுறுப்புள்ளவனாயும் அஞ்சா நெஞ்சுடையவனாயும், தான் கற்றவற்றைச் சிந்தித்துத் தெளிவதில் சமர்த்தனாயும் விளங்கினான். இச் சமயத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்குக் குறிப்பிடுவோம். இதனாலேயே அவனுடைய புகழ் இந்தியா வெங்கணும் பரவியது. மொகலாய மன்னர்கள் காலத்தில், அரண்மனைக்கு அணித்தாக, அரச குடும்பத்தினரின் பார்வையில் யானைச் சண்டைகள் நடைபெறுவது வழக்கம். ஒரு யானையை மற்றொரு யானையின்மீது ஏவவிட்டு, ஒன்றுக்கொன்று முட்டியும், தாக்கியும், சண்டை யிடுவதைக்கண்டு அனைவரும் மகிழ்ச்சிகொள்வர். இத்தகைய யானைச் சண்டை ஒன்று ஆக்ராவில் யமுனை நதிக்கரையிலுள்ள விசாலமான ஒருமைதானத்தில், ஷாஜஹான் வசித்திருந்த அரண்மனைக்கெதிரே 1633-ம் வருஷம் மே மாதம் இருபத்தெட்டாந் தேதி காலை நடைபெற்றது. ஷாஜஹானும், அவனுடைய குமாரரும், அரச குடும்பத்தைச் சேர்ந்த வேறு பலரும் இக்காட்சியைக் காணவந்திருந்தனர். சுதாகரன், சூரத்சுந்தரன் என்ற இரண்டு யானைகள் சண்டைக்கு விடப்பட்டன. குதிரைமீது ஆரோகணித்துக்கொண்டு அதனைப் பார்த்தவண்ணம் இருந்த அவுரங்கசீப், அருகே சென்று இப்போரைக் காணவேண்டுமென்று அவைகளை நெருங்கினான். இரண்டு மிருகங்களும் முதலில் முரணுற்று மோதிக்கொண்டன. பிறகு இரண்டும் சிறிது பின்வாங்கின. இச்சமயத்தில் சுதாகரன் என்ற யானைக்குக் கோபம் வந்துவிட்டது. தன் சத்துருவான சூரத் சுந்தரனைக் கவனியாமல் தன் கோபத்தை, அருகே நின்றுகொண்டிருந்த அவுரங்கசீப்பின்மீது காட்டத் தொடங்கிற்று. பிளிறிக்கொண்டே ஆவேசத்துடன் அரசிளங்குமரனை நோக்கி ஓடிவந்தது. இதனைக்கண்டு அங்கிருந்தோர் அனைவரும் அலறினார்கள்; ஐயகோ! அரசிளங்குமரா! என்று கூவினார்கள்; தங்கள் மீது எங்கு அக்கைம்மலை பாய்ந்துவிடுமோ என்று அஞ்சி பிரபுக்களும் ஆஸ்தானிகர்களும் விலகிப்போனார்கள். யானையின் கவனத்தை வேறு விதத்தில் திருப்பும் பொருட்டு, வேலைக்காரர்கள் பாணங்களைக் கொளுத்திப் போட்டார்கள். எங்கணும் ஒரே ஆரவாரமாயிருந்தது. ஆனால் அவுரங்கசீப் மாத்திரம் அசைவற்று நின்றிருந்தான். அப்பொழுது இவனுக்கு வயது பதினான்கு. இன்றோடு அவுரங்கசீபின் ஆயுள்முடிந்துவிட்டது என்று எல்லாரும் தீர்மானித்துவிட்டனர். இச்சமயத்தில், சுதாகரன் என்ற அந்தயானையானது, தன்தந்தத்தினால் அவு

ரங்கசீப்பின் குதிரையைக் குத்திவீழ்த்தியது. அரசகுமாரன் உடனே அசுவத்தினின்றும் இறங்கி தன்வாளை உருவி நின்ருன். இச்சமயத்தில் சிறிது சேய்மையிலிருந்த ஷுஜா ஜனங்களை விலக்கிக்கொண்டு, குதிரைமீது ஓடோடியும் வந்து, தன் ஈட்டியால் யானையின் விலாவில் தாக்கினன். தாக்கிய வேகத்தினல் குதிரை பின்னுக்குச் செல்ல அவன் கீழேவிழுந்து விட்டான். பிறகு பலர் வந்தனர். அரசகுமாரர்களுக்கு உதவிசெய்யும்படி ஷாஜஹான் தன்வேலையாட்களை ஏவினன். இச்சமயத்தில், சூரத்சுந்தரன் என்ற மற்ருெரு யானை மீண்டும் போரைத் தொடங்க சுதாகரனை நோக்கி வந்தது. அவுரங்கசீப்புக்கு நேர்முகமாக இருந்த சுதாகரனும் தன் சகோதரனுடன்மலையத் திரும்பிச் சென்றுவிட்டது. எனவே, அவுரங்கசீப், ஷுஜா முதலானவர்களுக்கு எவ்வித ஆபத்தும் இல்லாமல் இது முடிந்தது. உடனே ஷாஜஹான் அவுரங்கசீப்பை தன் மார்புறத்தழுவிக்கொண்டான். 'பகதூர்' என்ற பட்டத்தையும் அளித்தான். ஆஸ்தானிகர்களும் அவுரங்கசீப்பைப் புகழ்ந்தார்கள். குமாரன் மீது வைத்திருந்த அதிகமான அன்பினல், இத்தகைய முரட்டுத் தைரியம் கூடாதென்று அவுரங்கசீப்பை ஷாஜஹான் கண்டித்தான். அதற்கு அவுரங்கசீப், "இந்தச் சண்டையில் நான் இறந்திருந்தேனேயாகில், அதனல் எனக்கு அவமானமில்லை. சக்ரவர்த்திகள் மீதும் இயமன் தன் பாசத்தை வீசுகிருன். அஃதொரு அவமானமல்ல. ஆனல் சகோதரர்கள் நடந்துகொண்டமாதிரியே எனக்கு அவமானத்தைத் தருகிறது" என்று கூறினன்.

இச்சம்பவம் நடந்த மூன்று நாட்கள் கழித்து, அவுரங்கசீப்பின் பதினைந்தாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அவுரங்கசீப்பின் நிறையளவினதாகிய சுமார் ஐயாயிரம் மோகராக்களும், சுதாகரன் என்ற யானையும், இரண்டு லட்சம் ரூபா பெறுமான வேறு பொருள்களும் அவனுக்குப் பரிசாக வழங்கப்பட்டன. அவுரங்கசீப்பின் வீரத்தைக் கவிஞர்கள் புகழ்ந்தார்கள். பேதில்கான் என்ற சமஸ்தான கவிஞன் ஐயாயிரம் ரூபா சன்மானமாகப் பெற்ருன். மற்றும், ஐயாயிரம் பொற்காசுகள் ஏழைகளுக்கு வழங்கப்பட்டன.

அவுரங்கசீப், அவனுடைய பதினுருவது வயதில் (13-12-1634) பதினயிரம் அசுவங்களுக்கும் நாலாயிரபபேரடங்கிய காலாட் படைக்கும் தலைவனுக நியமிக்கப்பட்டான். வெளியே சென்ருல், தங்குவதற்கு சிவப்பு கூடாரத்தை அமைத்துக்கொள்ளும் உரிமை பெற்ருன். இது சக்ரவர்த்தியால் ஒரு சிலருக்கே வழங்கப்படும் உரிமையாகும். இதனுடன், அவுரங்கசீப்பின் கஷ்டத்தைக் காணுத, கவலையற்ற போகத்துடன் கூடிய வாலிப வாழ்க்கை ஒருவாறு முடிவு பெற்றதென்று கூறலாம். இது காறும் இவன் எவ்வித யுத்தகளத்திற்கும் அனுப்பப்படவில்லை. 1635-ம் வருஷம் செப்டம்பர் மாதமே முதன்முதலாக இவன் யுத்தகளத்திற்கு அனுப்பப்பட்டான்.

சித்திரப் பத்தி

1. சேரியிலுள்ள குடிசைகள்.



2. அல்லும் பகலும் பனியிலும் கடும் வெயிலிலும் கழனியில் வேலை செய்வதுடன் வண்டிகளையும் மாட்டுக்குப் பதிலாக இழுத்துச் செல்லுகிறார்கள். ஐயோ பாவம்! திக்கற்ற தீண்டப்படாதவர்களின் நிலைமையை யாரிடம் முறையிடுவது ?

3. விசுவாச மற்ற எஜமான் அக்கிரகாரத்திற்குள் வந்து விட்டதற்காக அவனை வாயில் வந்தபடி யெல்லாம் வைது திட்டுகிறார்.

4. அக்கிரகாரத்தில் நுழைந்த குற்றத்திற்காக மரத்தில் கட்டிவைத்து அடிக்கப்படுகிறான். பரிதாபம்! பரிதாபம்!!



5. அடிபட்டும் தயையில்லாத எஜமானுக்கு வேலைசெய்ய வயிற்றுக்கு கஞ்சிகூட இல்லாமல் குடும்பத்துடன் போகிறான் ஹா கஷ்டம். "வறுமை கொடிது கொடிது" யென்று ஔவை சொல்லிப் போனது முற்றிலும் சரியே!

சித்திரப் பகுதி.

3/0344

காந்தியடிகள் பாரத தேசத்தில் ஒற்றுமையை நிலை நாட்ட பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறார். இவ்வாரமும் பம்பாயில் எல்லா கட்சி மகாநாடு ஒன்று கூட்டி வைத்திருக்கிறார். ஒற்றுமை யென்ற மூடியால் மூடுகிறார். ஆனால் நம் தேசத்தில் கட்சிகள் எத்தனை? படத்தைப் பாருங்கள்.

தாழ்த்தப்பட்டவர்களின் நிலைமையை நினைக்கும் போதே என் ஹிருதயம் துடிக்கின்றது. கீழேயுள்ள ஜாதிகள் வளர்ச்சி பெறாத படி தடுத்து நிற்கும் கேர்வமிக்க சமூகம், எளியவர்க்குக் கல்வியை மறுத்து துன்புறுத்தும் சமூகம் தம் கால்களையே வெட்டி வீழ்த்திய சமூகமாம். அந்த சமூகம் இடிந்து விழ வேண்டியதுதான். ஆரியர்கள் இந்தியாவில் நடத்திய கர்ம வினைப் பயனை இப்போது அந்நியரிடம் அனுபவிக்கிறார்கள். ஸ்வாமி ராமதீர்த்தர்.

சுகாதாரம்

சுத்தமில்லாத வீடுகளில் தேக அரோக்கியமிருப்பது துர்லபம் அசுசியுள்ள வீட்டில் கட்டாயம் வியாதியிருக்கும். அசுத்த வஸ்துக்கள் மகா கெட்டவை. ஆகையால் விரைவில் அழுகும் தன்மையுள்ள உருளைக்கிழங்குத் தோல், கீரை, பழத்தோல் முதலியவற்றை வீட்டுக்குள் போட்டுவைக்காமல் உடனுக்குடன் தூர எறிந்துவிட வேண்டியது. அல்லது கொளுத்திவிட வேண்டும். அழுகல் நாற்றம் வியாதிக்கு முக்கியமான ஏதுவாகிறது. ஜலதாரைகளில் நாற்றம் இல்லாது கவனிக்கவேண்டும். அவைகளை அடிக்கடி ஜலம் விட்டு சுத்தி செய்விக்கவேண்டும். கெட்ட நாற்றங்கள் வீட்டிற்குள் செல்லாதவண்ணம் சாக்கடைக்கதவுகளை மூடிவைக்கவேண்டும். கெட்ட நாற்றமே சீக்குக்குக்காரணம். வீட்டிற்குள் துப்புவது, குப்பைகளை போட்டு வைப்பது, பிசகு. வீட்டை அடிக்கடி பெருக்கிச் சுத்தப்படுத்த வேண்டும். வருஷத்திற்கு இரண்டு தரமாவது வீட்டை வெள்ளை அடிக்கவேண்டும். ஏனெனில் புதுச் சுண்ணும்புக்கு துர்க்கந்தங்களை ஒழிக்கும் சக்தியுண்டு. அழுக்கு வஸ்திரங்களை உடனுக்குடன் சலவைக்கு அனுப்பி விடவேண்டும். வீட்டிற்குள் போட்டுவைக்க கூடாது.

சுத்தவாயு :—ஒவ்வொரு அறையிலும் சுத்தவாயு தாராளமாய்ப் பிரவேசிக்கச் செய்வது நலம். ஜன்னல்களை அடைத்து வைப்பது பிசகு. அறைகளில் காற்றும் சூரிய வெளிச்சமும் அவசியமானது. தினப்படி படுக்கைத்துணிகளைக் காற்று படும்படி போட வேண்டியது.

பகல் வெளிச்சம் :—சூரியப் பிரகாசமும் பகல் வெளிச்சமும் சுத்த வாயுவிற்கும் சுசிக்கும் உதவி யாகின்றன. இவை கந்தமூல வஸ்துக்களுக்கும் விலங்கு மனித ஜாதிக்கும் பலத்தையும் திடமான வளர்ச்சியையும் கொடுக்கின்றன. இவை இல்லாவிடின் மெலிவும், அசௌக்கியமும் உண்டாகும். ஆனபடியால், அறைக்குள் வெளிச்சம் தாராளமாய்ப் புகுதல் வேண்டும். தற்கால நாகரீக மென்று ஜன்னல்களிலும், கதவுகளிலும் மூடு திரைகள் போடுகிறார்கள். இது மிகக் கெடுதி.

தேக ஆரோக்கியம் :—வீடுகளை எவ்வாறு சுத்தி செய்கிறோமோ, அதேமாதிரி நமது தேகத்தையும் சுத்தி செய்த லவசியம். உள்ளிருந்து உண்டாகும் வேர்வையினாலும், அழுக்கினாலும் நமது சரீரம் மலினப்படுகிறது; அவைகளை உடனுக்குடன் சுத்தம் செய்யாது உடம்பிலே இருக்கும்படி செய்தால் வேர்வைக் கால்கள் அடைபட்டு அதனால் பல கொடிய வியாதிகள் சம்பவிக்க ஏதுவாகிறது. ஆகையினால் இளவயதினரும் முதுவயதினருமாகிய பலரும் சிரசு பாதம் ஆதியந்தமும் குளிர்ந்த நீரிலாவது வெந்நீரிலாவது ஒரு

துண்டை நனைத்துத் தினப்படி, வேனிற்காலத்தில் இரண்டு, மூன்று தரம் துடைத்தல் நலம். வஸ்திரங்களைத் துவைத்துக் கட்டவேண்டும். ஒரு நாள் கட்டியதை, எக்காரணத்திலாவது மறுநாள் துவைக்காமல் கட்டக்கூடாது.

உணவு :—ஆகாரங்கள் சுத்தமுள்ளனவாகவும், நாள் படாதனவாகவும் இருத்தல்வேண்டும். உணவு செவ்வையாய்ச் சமைக்கப்படவேண்டும். பழ வகைகள் நன்கு பழுத்திருத்தல் வேண்டும். ஆகாரம் மிதமாகவும் காலம் தப்பாமலும் கொள்ளவேண்டும், மெதுவாகவும், நன்றாய் மென்று உட்கொள்ளவேண்டும். நன்றாய் மென்று சாப்பிடுகிற ஆகாரம் விரைவில் ஜீரணமாகும். ஜீர்ணிக்கப்பட்டு ரத்தமாகும், மெல்லாது விழுங்கிய அன்னம் தேகத்தில் சேராது போகும், நன்றாய் மென்று உண்ணாதவர்களுக்குத் தொப்பையும், தொந்தியும் ஏற்படும். மாம்ச பதார்த்தங்களால் வயிற்றில் அநேக வித பூச்சிகள் ஏற்பட்டு, பல கெடுதிகள் செய்வதாகப் பிரபல அமெரிக்க டாக்ட்டர்களே ஒப்புக்கொள்கிறார்கள். மாம்ச உணவுகளை அறவே ஒழித்தல் நலம். உருளைக் கிழங்கு, காய்கறிகள் கோதுமை, அரிசி, முதலிய கந்தமூல உணவுகளை அதிகமாக நாம் உட்கொள்ள வேண்டும். அரிசியைவிடக் கோதுமை அதிக சத்துள்ளது. தென்னாட்டில் அரிசியே சாப்பிட்டு வழக்கமானபடியால் திடீரெனக் கோதுமையை ஆகாரமாக மாற்றுவது முடியாத காரியம். ஆகையால், ஒரு நேரமாவது கோதுமை ஆகாரம் சாப்பிடுவது நலம். சாப்பிடுவதற்கும் சாதத்தைவிட ருசியா யிருக்கும். நீரழிவுபோன்ற கொடிய வியாதிஸ்தர்களுக்கெல்லாம் கோதுமையே ஆகாரமாய் உட்கொள்ளவேண்டு மென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். கோதுமை ஆகாரத்தைத் தென்னாட்டில், முக்கிய ஆகாரமாக செய்விக்கவேண்டும்.

சாராயம், பிராந்தி, உஸ்கி முதலியன, தேகத்தை கெடுக்கும் விஷத்தண்ணீர்கள் இவை உணவைச் சேர்ந்தவையல்ல. ஆனால், நாகரீகம் பெருகப் பெருக வீட்டு அலமார்களில் அலங்காரமாக வைத்து, மருந்தைப்போல பயபக்தியுடன் சிலர் அருந்துகிறார்கள். இதைவிடச் சரீரத்திற்கு கெடுதியைச் செய்யக்கூடியது வேறொன்றுமில்லை. இதை முற்றிலும் நீக்கவேண்டும். தேத்தண்ணீர், காபி, முதலிய "நாகரீக" பானங்களும் இரண்டாவதாகச் சொல்லலாம். இவைகளை சாப்பிட்டதும் சுருசுருப்பைக் கொடுக்கும். ஆனால் கடைசியில் மிக கெடுதிகள் செய்யும். பால் அல்லது நீர் கலந்தபால், மோர், இளநீர் எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிக போஷணை கொடுக்கக்கூடியன.

K. S. S.

விநோதக் குறிப்புகள்

பூர்வீக நாகரீகச் சின்னங்கள்.

கல்வெட்டு சிலாசாஸன இலாகாவின் தலைவரான ஸர். ஜான் மார்ஷால் பஞ்சாப்பிலும் ஸிந்துப் பிரதேசத்திலும் சில அபூர்வமான புராதன நாகரீகச் சின்னங்களைக் கண்டு பிடித்திருப்பதாகப் பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறார். பூர்வீக இந்திய நாகரீசமும், 5000-வருஷங்களுக்கு முன் மெஸபொடேமியாவில் இருந்த நாகரீகமும் எத்தகையதென்று அதிலிருந்து விளங்குகிறது. ஸிந்துப் பிரதேசத்தில் லார்கானு ஜில்லாவைச் சேர்ந்த மோஹந்தாரோ என்ற விடத்தில்தான் பிரஸ்தாப சின்னங்கள் அகப்பட்டனவாம். வீடுகளும் கோயில்களும் எரித்த செங்கல்லால் பண்டைக் காலத்தில் கட்டியிருந்ததாகத் தெரிகிறது. ஜல வசதிக்கான குழாய்களும் அவற்றிற்கு சலவைக் கல் மூடிகளும் இருந்ததாகத் தெரிகிறது. விநோதமான நாணய வாரிகளும், கல் மோதிரங்களும், பாசக் காய்களும், பல மாதிரியான முத்திரைகளும், அகப்பட்டிருக்கின்றன. முத்திரையில் காணப்படும் எழுத்து இன்ன பாஷையைச் சேர்ந்ததென்று தெரியமில்லை. மெஸபொடேமியாவின் தென்பாகத்தில் ஆறேழு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அனுஷ்டானத்திலிருந்த நாகரீகச் சின்னங்களைப் போல் இவை இருக்கின்றன.

லண்டனில் ஹிந்துக்கோயில்.

லண்டனில் ஒரு தர்மசாலையும் ஹிந்துக்கோயிலும் கட்ட 30 லட்சம் தேவையாயிருக்கிறது. அத்தொகையை வசூலிக்க இப்போது இந்தியாவில் பிரயத்தனம் நடக்கிறது. தர்ப்பங்கா மகாராஜாவும் இன்னொருவரும் இதில் சிரத்தையெடுத்திருக்கிறார்கள். தர்பங்கா மகாராஜாதான் நிர்வாகக் கமிட்டித் தலைவராவர்.

விநோதமான டாக்டர்.—கொஞ்சமேனும் இரத்தமில்லாத ஸர் ஹெர்பெட்டு பார்கர் என்ற சோகை டாக்டர் ஒருவர் சில காலமாகச் சூரியப்பிரகாசத்திலிருந்து மனிதன் தேகபுஷ்டியைப் பெறக் கூடுமென்றும், மனிதனின் தேகத்தைச் சூரிய வெப்பத்தில் நன்றாக உலரப் போட்டு விட்டால் அவனுக்கு தேகபுஷ்டியும் பல விருத்தியுமுண்டாகுமென்றும் உபதேசித்து வருகிறார். அந்த டாக்டரே ரத்த சோகையினால் பலவீனமாயிருக்கிறாரென்றால், இவர் கொள்கையைக்கேட்ட பிறர் நகைக்கமாட்டார்களா?

குருடருக்குப் பார்வை கொடுப்பதெப்படி:—வாலில்லாக் குரங்கின் கண்களை குருடர்களின் கண் குழிகளில் வைத்துப் பதித்து அவர்களைப் பார்க்கும்படி செய்யலாமென அமெரிக்கா வைத்திய நிபுணராகிய மகதியோரக் டாக்டர் கூறுகிறார்.

இமயமலையில் அனுமார்:—இமயமலையின் உயரிய சிகரமான (எவரெஸ்ட் என்ற) கௌரிசங்கின் அருகே ஒருவகையான வால்மனி

தர்கள் வசிக்கிறார்களாம். அவர்கள் எட்டடி உயரமும் உடம்பெல்லாம் அடர்த்தியான கரிமயிர் உள்ளவர்களாகவும் நீண்டவால் உள்ளவர்களாகவும் இருக்கிறார்களாம். அவர்கள் மான்களை அடித்துத்தின்கிறார்களாம். அவர்கள் மனிதர்களையும் கொன்று அவர்கள் விரல்களையும் மூக்குகளையும் நாக்குகளையும் தின்று விடுகிறார்களாம். அவர்கள் தங்கள் வாலைச்சுருட்டிக்கொண்டு அதன்மீது உட்காருகிறார்களாம். அவர்களுக்கெல்லாம் அரசனாக ஓர் ஹனுமார் இருப்பதாகவும் கேள்வி. கௌரி சங்கரைக் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள திருக்கூட்டத்தைச் சேர்ந்த தளபதி ப்ரூஸ் என்பவர் இவ்விஷயத்தை விவரித்து எழுதுகிறார்.

வாய்க்கு வழங்காத பெயர் :—இங்கிலாந்தில் அக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் "ஒரு பர்ம அரசனின் கண்ணாடி அரண்மனைக் கதை" என்றதோர் புஸ்தகத்தை மிஸ்டர் பா. மாங்டிங் என்பவரும், ஜி. எச். லூஸ் என்பவரும் எழுதிப் பிரசுரித்திருக்கிறார்கள். அதில் அந்தப் பர்மிய அரசனின் பெயர் ஆங்கிலத்தில் 75 எழுத்துக்களைக் கொண்டதாய் இங்கிலீஷ்காரர்கள் வாயில் நுழையாத அவ்வளவு கஷ்டமுடையதாயிருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றார்கள். அவ்வரசனின் பெயர்:—"ஸிவிதரி பாவனாதீர் த்யாப வாரதாந்தித சுத்தம் ரராஜா மஹாதிபதி ரபதி சாது."

தகரம் பொறுக்கிய தனவந்தன் :—பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஒரு ஹோட்டலில் எறிந்துகொண்டே யிருக்கும் தகர டின்களை எல்லாம் ஒருவன் பொறுக்கிக் கொண்டே வந்தானாம். இறுதியில் 100 டன் தகரங்கள் சேர்த்து அவைகளை குழந்தைகள் விளையாடும் தகர சிப்பாய்கள் தகர குதிரைகள், தகர ரயில்வண்டி இவை போன்ற பொம்மைகளாகச் செய்து வர்ணம் கொடுத்து விற்று ஏராளமான பொருள் சம்பாதித்து விட்டானாம்.

மூங்கிலின் அற்புதமான உபயோகம் :—மூங்கிலை சில ரசாயனப்பொருளைக் கொண்டு பாடம் செய்து ஜப்பானில் கான் கிரீட்டிற்குப் பதிலாக உபயோகப் படுத்துகிறார்களாம். ஆனால் அந்த வேலை ஒரு சிலருக்குத் தான் தெரியுமாம். அவ்விதம் பாடம் செய்யப்பட்ட மூங்கிலைக்கொண்டு வாய்க்கால் பாலங்களும் கணவாய்களும் கட்டுகிறார்களாம்.

அக்பரின் நாணயம் :—அக்பர் காலத்திலும் ஜிஹாங்கீர் காலத்திலும் வழங்கப் பட்டு வந்த நாணயங்கள் இரண்டை டெல்லியில் ஒரு ஏழை முஸல்மானிடமிருந்து விலைக்கு வாங்கி டெக்கா நாணயக்காக்ஷி சாலையில் வைத்திருக்கிறார்கள். அக்பர் காலத்து நாணயம் இல்லாஹி வடிவமுடையதாய் அகம்மதாபாத் நாணயசாலையில் அக்காலத்தில் அச்சிடப் பட்டதென்று தெரிய வருகிறது. ஜிஹாங்கீர் நாணயம் ஹிஜி 102-ல் அச்சிடப்பட்டதாக யூகிக்கப் படுகிறது.

பத்திராதிபர் குறிப்பு

பிரிட்டிஷ் எலக்ஷன்:—இங்கிலாந்தில் தேர்தல் முடிந்து விட்டது. கன்சர்வேடிவ் கட்சியினர் ஜெயம் பெற்றனர். லிபரல்கட்சிக்கு எதிர்பார்த்திராத தோல்வி ஏற்பட்டது. தொழிற்கட்சி மந்திரி மாக்டனுல்டு தமது பதவியை நவம்பர் மாதம் 4-ந் தேதி ராஜினுமா செய்துவிட்டார். இனி ஐந்து வருஷம் வரை கன்சர்வேடிவ் கட்சியினரே ஆட்சி செய்யலாம். இந்தக் கட்சியால் இந்தியாவுக்கு என்ன நன்மை ஏற்படுமென்பதைத் தற்சமயம் சொல்வதற்கில்லை.

மிஸ்டர் பால்ட்வின்—முதன்மந்திரி, காமன்ஸ் சபையின் தலைவர். **லார்ட் பிர்க்கன்ஹெட்**—இந்தியா மந்திரி.

*　　*　　*　　*　　*

காந்தியடிகளின் கல்கத்தா விஜயம்:—டெல்லியிருந்து 3-11-24 காலையில் புறப்பட்டு 4-11 24 காலை கல்கத்தா வந்து சேர்ந்தார். திரளான ஜனங்கள் அதிகாலையிலிருந்தே கூட ஆரம்பித்தனர். ஸ்டேஷனுக்கு வெளியில் மகாத்மா கூட்டத்திற்கிடையில் வருவது கஷ்டமென நினைத்து 30 மயிலுக்கப்பாலுள்ள பாண்டல் என்னுமிடத்திலேயே இறக்கி மோட்டாரில் ஸ்ரீ தாஸ் அழைத்து வந்தார். பஞ்சாப் மெயிலில் மகாத்மாவை வண்டியில் காணுது ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஏமாந்து போயினர். ஆயினும் அவர் வண்டியிலிருந்த இராட்டினத்திற்கு மாலைபோட்டுக் காங்கிரஸ் தொண்டர்களும் ஜனங்களும் அதை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

*　　*　　*　　*　　*

கல்கத்தா கார்ப்பொரேஷன்:—நகர சபையார் மகாத்மாவுக்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். அதாவது:—

> "சிறையின் வாயிற்படியில் நின்றுகொண்டு நாங்கள் இன்று தங்களை வரவேற்கிறோம். இந்நகர சபையின் தலைமை நிர்வாக உத்தியோகஸ்தரை அதிகாரிகள் கைதுசெய்து இச்சபையின் வேலைகளை நடைபெறுமற் செய்திருக்கிறார்கள். ஆயினும் எங்களுடைய நம்பிக்கை இத்தகைய செய்கைகளால் அசைந்துவிடாது. தாங்கள் என்றையதினம் சிறைக்குள் தள்ளப்பட்டீர்சளோ அன்றே இந்தியாவில் சுதந்தரக்கொடி நாட்டப்பட்டுவிட்டது. நாங்கள் இன்றையதினம் தங்களை வரவேற்பதற்கு மட்டுமன்றி எங்களுடைய போராட்டம் சம்பந்தமாகத் தங்களுடைய உபதேசத்தைக் கேட்கவும் எங்களுடைய வேலை வெற்றிபெறுமாறு தங்களுடைய ஆசியைப்பெற விரும்பியும் இங்குக் கூடியுள்ளோம்."

*　　*　　*　　*　　*

பத்திராதிபர் குறிப்பு

புதுக்கோட்டை புதிய சட்டசபை:—இந்த புதிய சட்ட சபைக் கூட்டம் 1—11—24ல் முதல் முதல் கூடியது. முக்கியமான இரண்டு தீர்மானங்கள் நிறைவேறின. (1) மதுவிலக்கு: (2) ராட்டினபயிற்சி சர்க்கார் பள்ளிச் சிறுவர்களுக்கு கட்டாயமாய்க் கற்றுக்கொடுத்தல்.

இது சாலவும் நன்று, ஆனால் இதை ஏகமனதாகப் நிறைவேற்றிய அங்கத்தினர்களும் அவரவர்கள் வீட்டிலும் ராட்டினத்தில் நூல் நூற்க உடனே ஏற்பாடுசெய்ய வேண்டும். இவர்கள் சாதாரண ஜனங்களுக்கு ஓர் வழிகாட்டியாயிருத்தல் வேண்டும். திருவிதாங்கூர் சட்டசபையிலும் இராட்டின விஷயமாய் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. புதுக்கோட்டை சட்டசபை அங்கத்தினர்களை நாம் மனதார வாழ்த்துகிறோம்.

*　　*　　*　　*　　*

கராச்சி முனிசிபாலிட்டி:—இச்சபையின் அங்கத்தினர்கள் அங்கு விஜயம் செய்யப்போகிற கவர்னருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதில்லையென்று தீர்மானம் செய்தனர். இதை மகாத்மா ஆதரிப்பாரென நம்புவதற்கில்லை. அங்கத்தினர்கள் தேசிய உணர்ச்சியைக் காங்கிரஸ் நிர்மாண வேலையில் தீவிரமாய் காட்ட வேண்டும். இவ்வித வெறுப்புக்கு இடம் கொடுப்பது சரியில்லை. திரும்ப மேற்படி சபையில் ஒரு கூட்டம் கூடி உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ்வாதிகள் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லையாம். மகாத்மா விஜயம் செய்திருந்த சமயம் ரூ. 1,500 செலவை கவர்ன்மெண்டார் ஆதரித்திருக்கிறார்கள்.

*　　*　　*　　*　　*

கதர் விற்பனை:—சென்னை தமிழ் நாடு கதர் வஸ்திராலயத்தில் தீபாவளி வாரத்தில் ஏழாயிரம் ரூபாய்க்குமேல் கதர்விற்பனை ஆயிற்றாம். இம்மாதிரி ஒவ்வொரு மாதமும் சென்னையில் விற்பனை செய்ய முயற்சித்தல் வேண்டும். அயல்நாட்டுத் துணிகள் மாத மாதம் கிடங்குத் தெருவில் எத்தனையோ லக்ஷத்திற்கு விற்பனையாவதை இந்நகரவாசிகள் கவனிக்கவேண்டும்.

*　　*　　*　　*　　*

சென்னை நகர பரிபாலன சபை:—இந்த சபைக்கு டாக்டர் உஸ்மான் சாயபு தலைவராக அங்கத்தினர்களால் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இவர் பதினோரு வருஷ காலமாய் அங்கத்தினராக இருந்துவருகிறார். இவர் தம் பொறுப்பைச் சரிவர நிர்வகித்து நகரபரிபாலனத்தை செவ்வையாக நடத்துவாரென்று எதிர்பார்க்கிறோம். சென்னை நகரம் தற்சமயம் வைத்தியர்களுக்கு (டாக்டர்) வேட்டையாடும் நகரமாயிருக்கிறது. சீக்கில்லாத வீடில்லை. மகாத்மா காந்தி கல்கத்தா நகர பரிபாலனசபை உபசாரப் பத்திரத்திற்குப் பதிலளித்ததை டாக்டர் உஸ்மான் அவர்கள் கவனித்த லவசியம்.

அதாவது,

“ஒரு நகரபரிபாலன சங்க எல்லைக்குள்ளிருக்கும் ஏழை மக்களுடைய வாசஸ்தலங்களின் நிலைமையைக் கொண்டே அச்சங்க வேலையைக் கவனிக்க வேண்டுமென்றும், அரண்மனை களாலும், பணக்காரர்கள் வசிக்கும் இடங்கள் சுத்தமாக வைக் கப்பட்டிருக்கின்றன வென்பதைக் கொண்டும் கவனிக்கக்கூடா தென்றும்”

நாம் விரும்புவதும் ஏழை மக்களின் வசதியே.

* * * * *

அடையாற்றில் இராட்டினம்.—“சுயராஜ்யா” பத்திரிகையின் அடையாறு நிருபர் அப்பத்திரிகைக்கு எழுதியிருப்பதாவது:—

டாக்டர் பெசண்டும் அவருடைய கட்சியும் இவ்வாண்டு காங்கிரஸிற்குச் செல்லத் தீர்மானித்து விட்டனர். திவ்யஞான சங்கத்தின் வருஷாந்தக் கூட்டம் பம்பாயில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு வருவோர் பெல்காமுக்குச் செல்வது சௌ கரிய மாகும்படியாகக் கூட்டத்தின் தேதி குறிப்பிடப்படும். அடையாற்றில் இராட்டினத்துக்கு முக்கியமான ஸ்தானம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. தற்போது அடையாற்றில் வசிக்கும் பிரான்ஸு தேசத்தின ராகிய மான்ஸியார்லி என்னும் மாதரார் இங்கு முதன் முத லாக நூல் நூற்க ஆரம்பித்தார். அவருடைய முயற்சியினால் இப்பொழுது அடையாறு வாசிகளில் பலர்தவறாது நூல் நூற்று வருகின்றனர். அடுத்த மாதத்தில் மகாத்மாவின் மூல மாகக் காங்கிரஸுக்கு நூல் சந்தா அனுப்பலா மென்று அடை யாறு வாசிகள் எதிர் பார்க்கின்றனர். இம்மாதம் வெளியான ‘தியாஸபிஸ்ட்’ என்னும் திவ்யஞான சங்கத்தின் பத்திரிகை யில் டாக்டர் பெசண்டு அடையாற்றில் நூல் நூற்றல் அபி விருத்தி யடைந்து வருவதைப்பற்றிக் குறிப்பிட்டு, ஸ்ரீமதி மான்ஸியார்லியின் சிறந்த முறையைப் பாராட்டி யிருப்ப துடன் எல்லா கிராமங்களிலும் இராட்டினம் பரவவேண்டு மென்று தாம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இனியாவது ராட்டின விஷயமாய் குதர்க்க வாதம் செய்யும் சகோதரர்கள் மனதுவைத்து ராட்டினத்தை குடிசைத் தொழிலாகச் செய்ய முயற்சிப்பார்களாக. தென்னாட்டிற்கும் வங்காளத்து கிழசிங் கம் ஆச்சாரியர் பிரபல சந்திரராயைப் போன்ற பெரியார் ஒருவர் ஏற்படவேண்டும்.

சுயராஜ்ய கட்சியும் காந்தியும்.

மகாத்மாவும், திரு. தாஸும், மோத்திலால் நேருவும் இருகட் சிகளும் சமரசமாக வேலை செய்யவேண்டு மென்று உடன்பட்டு மூவரும் கையெழுத்திட்டு ஒரு யாதாஸ்தும் வெளியாக்கியிருக்கி றார்கள்.

பத்திராதிபர் குறிப்பு

வைக்கம் சத்தியாகிரகத் திருக்கூட்டம்:—திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்து பன்னிரண்டுபேர் ஜாதி ஹிந்து பிரதிநிதிகள் மகாராணியைப் பேட்டிகண்டு திருவிதாங்கூரிலுள்ள எல்லாப் பொதுச் சாலைகளிலும் தீண்டாதார் உள்பட அனைவருக்கும் ஒரேவிதமான உரிமை இருக்கவேண்டு மென்ற கருத்தடங்கியதை வாசித்து இருபதாயிரம் பேர் கை எழுத்திட்ட மகாஜரையும் ஆஜர் செய்தார்கள். பத்திரத்தில்கண்ட விஷயங்களுக்கு உடனே பதில் சொல்வதற்கில்லையென்றும், ஆலோசிப்பதாகவும் மகாராணியார் பதிலளித்திருக்கிறார்.

இனி என்ன ஆலோசிக்க விருக்கிறதென்பது புலப்படவில்லை. திருக்கூட்டம் புறப்பட்ட இடமிருந்து செல்லும் வழிகளிலெல்லாம் மிகுந்த குதூகுலத்துடன் உபசரிக்கப்பட்டது. இக்கூட்டத்தாரை ஒவ்வொரு ஊராரும் வரவேற்று உபசரித்ததும், வித்தியாசமில்லாமல் விருந்தளித்ததும் கூட்டங்கள்கூடி தீண்டாமையை யொழிக்க வேண்டு மென்று ஆமோதித்ததும், ஜாதி ஹிந்துகளும் தீண்டாமையை யொழிக்க எவ்வளவு அக்கரைகொண் டிருக்கிறார்களென்பதை விளங்கும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தார் தாராள நோக்கத்துடன் தீண்டாமையென்ற "கொடிய பேயை" தம் ராஜ்யத்திலிருந்து விலக்க முன் வருவார்களென்று பெறிதும் நம்புகிறோம்.

தென்னாட்டிலும், வைக்கம் திருக்கூட்டத்தைப் போல் பல கூட்டங்கள் புறப்படவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். காங்கிரஸ் வாரத்திலோ, அல்லது வருஷத்திற்கு இருமுறை அங்காங்கு கூட்டம் ஏற்பட்டு ஒரு ஊரில் எல்லாக் கூட்டங்களும் குறித்த காலத்தில் வந்து சேரவேண்டும். அங்கு கூடி திருவிழா கொண்டாடல் வேண்டும். வித்தியாசம் பாராட்டாமல் ஜாதி ஹிந்துகள் "சமத்துவம், சகோதரத்வம்" மென்பதை காரியாம்ஸத்தில் காட்ட வேண்டும். வரும்வழி யெல்லாம் தீண்டாமை, மதுவிலக்கு, கதர், போன்ற நல் விஷயங்களில் பிரச்சாரம் செய்துக்கொண்டு வர வேண்டும். வழியிலுள்ள சேரிகளுக்குப்போய் அங்குள்ள சிலரையும் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி வருஷத்திற்கு இருமுறைசெய்தால் ஜனங்களுக்கு இவ்விஷயத்தில் ஊக்கமும் உற்சாகமு முண்டாகும். தீண்டாமை என்ற கொடிய பேயும், தென்னாட்டில் விரைவில் ஒழியும். பத்திரிகையில் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று எழுதமட்டும் செய்வது அத்தனை பயனை உண்டாக்காதென்பது நமது தாழ்மையான அபிப்ராயம்.

* * * * *

பீ அம்மாள்:—அலிசகோதரர்களின் அருமைத் தாயார் ஆண்டவன் அடியிணை சேர்ந்தாரென்பதைக்கேட்டு வருந்துகிறோம். அலிசகோதரர்கள் சிறை சென்றிருந்த சமயம் லாகூரில் ஒரு பொதுக் கூட்டத்தில் அம்மையார் கோஷா என்ற மூகமூடியை முதல் முதல்

யெடுத்து வீசி யெறிந்துவிட்டுச் சொன்னதாவது "இங்கு கூடி யிருப்பவர்களெல்லோரும் எனக்கு (எனது பிள்ளைகளாக) மகம்மது அலி சவுகத் அலியாகவே தோன்றுகிறார்கள் அதனால்தான் புராதீன வழக்கமான என் மூக மூடியை இன்று எடுத்துவிடுகிறேன். என்னை போன்ற வயதுசென்ற ஸ்திரி, மூக மூடியை எடுத்துவிட்டு தேசத்திற்கு உழைக்க முன்வந்திருக்கும்போது, நீங்களெல்லாம் சும்மா யிருப்பது சரியாவென்று கேட்டனர்." அலிசகோதரர்களுக்கு எமது அநுதாபத்தைச் செலுத்துகிறோம்.

மதிப்புரை

ஹரி ஹர கதா ரத்னவளி :—இப்பெயர்கொண்ட மாதாந்த தமிழ்ச் சஞ்சிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். ராதா கலியாணம் என்ற ஹரிகதை இதில் வெளிவந்துள்ளது. 300 ஹரிகதைகள் வரையினும் பிரதிமாதம் ஒவ்வொன்றாக மஹாராஷ்டிராம் ஹிந்துஸ்தானி, முதலிய பலபாஷைகளில் திண்டி, சாகி முதலிய பலவர்ண மெட்டுக்களுடனும் இதில் வெளியாகும் என அறிகிறோம். ஹரிகதா காலட்சேபம் செய்ய விரும்புவோருக்கு இச்சஞ்சிகை பெரிதும் உதவியாயிருக்கும். இதன் வருடச் சந்தா ரூபாய் ஐந்தும் வேண்டுவோர் மானேஜர் "ஹரி ஹர கதா ரத்னவளி" ஆபிஸ், 337, வடக்குச் சித்திரவீதி, ஸ்ரீரங்கம் என்று எழுதிக் கொள்ளவும்.

உலக ரகசியம் :—இப்பெயர் கொண்ட ஒரு இனிய தமிழ்ப் புத்தகம் வரப்பெற்றோம். இதில் உலக விநோதங்கள் போன்ற பல அற்புத விஷயங்கள் பல பத்திரிகையிலிருந்து திரட்டிப் புத்தக ரூபமாய், அச்சிட்டிருப்பது மெச்சத்தக்கதே. கிளேஸ் காகிதத்தில் முத்துப்போன்ற அச்சுகளில் அச்சிடப்பட்டிக்கிறது. இதன்விலை ரூபாய் ஒன்றே. வேண்டுவோர், ஸ்ரீமான் T. G. கிருஷ்ணசாமி பிள்ளை, இந்திரவிலாஸ், நாச்சியார் கோயில் ,என்று எழுதிக்கொள்ளவும்.

ராஜ கோபிச்சந்த .—இது ஒரு இனிய தமிழ்நாடகம். இதை இயற்றியவர் ஸ்ரீமாந் திருலூர் மா. ரத்தின சபாபதி முதலியாராவர். அருபத்தாறு பக்கங்கள் கொண்டது. இதன் விலை அணா எட்டே. வேண்டுவோர் S. M. ரத்தினசபாபதி முதலியார் 3, முள்ளாசாயபு சந்து, சவுகார்பேட்டை, சென்னை என்று எழுதிக் கொள்ளவும்.

வைத்தியக் குறிப்புகள்

கண்ணோவுக்கு மருந்து.—$1\frac{1}{2}$ குண்டுமணி இடை படிகாரத்தை 1 அவுன்சு ஜலத்தில் போட்டு கரைத்து தினம் 5, 6, துளி கண்ணில் விட்டால் சொஸ்தமாகும்.

காதுநோய்.—வெங்காயம் விராகனிடை 2, வசம்பு விராகனிடை 2, மஞ்சள் விராகனிடை 4, இவைகளை பொடித்து ஒரு படி வேப்பெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றியெரித்து வடித்து வைத்துக்கொண்டு 4, 5, துளி காதில் விட்டு வர காது ரோகங்கள் தீரும்.

காதில் வரும் சீழ் நிற்க.—ஒரு சேர் வேப்பெண்ணெயில் வசம்பு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் வகைக்கு விராகனிடை சூரணித்துப் போட்டு அடுப்பேற்றியெரித்து வடித்து வைத்துக் கொண்டு காதில் 5, 6, துளி விட்டுவர காதில் வரும் சீழ் நிற்கும்.

காது இரைச்சல் தீர.—$2\frac{1}{2}$ அவுன்சு நல்லெண்ணெயில் 2 அவுன்சு தைவேளைச்சாரைச் சேர்த்து அடுப்பேற்றியெரித்து வடித்து காதில் 5, 6, துளி விட்டுவர காதிரைச்சல் தீரும்.

ஒற்றைத்தலைநோய்.—இஞ்சிச்சாறும், நல்லெண்ணெயும் வகைக்கு 4 அவுன்சு சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து தினப்படி சிரசில் நன்றாய்த் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வர ஒற்றைத்தலைநோய் தீரும்.

தொண்டைக் கரகரப்பிற்கு.—ஒரு விராகனிடை மஞ்சளை தூள் செய்து கால் படி பசும் பாலில் விட்டு காய்ச்சி சாப்பிடக் கரகரப்புத் தீரும்.

தொண்டைக் கம்மலுக்கு.—கடலைப் பிரமாணம் காசிக் கட்டியை வாயிலடக்கி வைத்துக் கொண்டு ரசத்தை மிழுங்க கம்மல் தீரும்.

வாய் ரணத்திற்கு.—படிக்காரம் விராகனிடை 2, ஜலம் சேர் 1, தேன் விராகனிடை 2, இவைகளை சேர்த்து வாய்க் கொப்பளிக்க வாய் ரணம் ஆரும்.

---

16. சுகவழிகள்.

[யுனைடேட் ஸ்டேட்ஸ் ஆயுள்விருத்தி சங்கத்தால் வெளியிடப்பட்டவை, ஆ. தீ.]

1. நீங்கள் வசிக்கும் அறைகளில் தாராளமாகக் காற்றை விடுங்கள்.

2. லேசாகவும், தளர்ச்சியாகவும், துவாரங்கள் உள்ளதாகவுமுள்ள ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள்.

3. திறந்த வெளிகளிலுள்ள வேலைகளையும் விளையாட்டுகளையும் தேடுங்கள்.

4. சாத்தியமானால் திறந்த வெளியில் படுத்துறங்குங்கள்.

5. சுவாஸத்தை நன்ருக இழுத்து விடுங்கள்.

6. அதிக ஆகாரத்தை உட்கொள்ளாதீர்கள்; சரீரத்தின் பளுவையும் பெருக்கிக் கொள்ளாதீர்கள்.

7. கோழி முட்டை, மாமிசம், உப்பு, விருந்து சாப்பாடு முதலியவைகளை அதிகமாக உட்கொள்ளாதீர்கள்.

8. கெட்டியாகவும், பருமனுகவுமுள்ள சில ஆகாரங்களையும், சில பச்சைக் கறிகளையும் சாப்பிடுங்கள்.

9. மெதுவாகச் சாப்பிடுங்கள்.

10. உள்ளும், புறம்பும் போதிய ஜலத்தை உபயோகப்படுத்துங்கள்.

11. அடிக்கடி மலத்தை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

12. நிற்கையிலும், உட்காருகையிலும் நேராக இருங்கள்.

13. விஷங்களும், தொத்து வியாதிகளுக்குக் காரணமான வஸ்துக்களும் சரீரத்தில் சம்பந்தப்பட இடங்கொடுக்காதீர்கள்.

14. பற்களையும், நாக்கையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

15. நிதானமாக வேலை செய்து, விளையாடி, உறங்குங்கள்.

16. மனதை நிம்மதியாக வைத்துக்கொள்ளுங்கள்.



PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு

ரூ. 2-4.



"Collapsible" Key Ring.

—

A Key Ring that does not buldge the pocket,

—

Price As. 3 each.

Dozen Rs. 2.

திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புதுமாதிரியான நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணா 14.
4 மு. ,, 1-க்கு ரூ. 1.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

வேல் முருகன்.

**" கிள்ளை மொழி யுமையாள் கேண்மை மிகு மிளைய
பிள்ளை திருவடியே பேண்."**

கலியுக வரதனாய் விளங்கும் வெற்றிவேற் கடவுள் திருவுருவம் அவன் பால் அன்புடைய அன்பர்கள் இல்லந்தோறும் பூஜித்தற்குறிய சிறப்புடையதென்பது யாவரும் அறிந்ததே. நாம் தயாரித்துள்ள இம்முருக மூர்த்தம் அருள் சுரந்து எமது கனவில் தோன்றி காட்சியளித்ததாகும். தாமின்புறுகிறபடி உலகமும் இன்புறவேண்டுவது நல்லோர் கருத்தானதால் அம்முறைபற்றி அன்பர்கள் அக்கோலமயிலின் வேலானது மாலனைய ரூபத்தை இன்றே எமக்கெழுதி ஒரு பிரதிபெற்று தக்கவிடத்தில் எழுந்தருளச் செய்து ஆராதித்து இஷ்ட சித்திபெற்று இன்புறுவாராக.

அறுமுகன்பால் அன்புள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் சுகுமாரமுள்ள இத்திருவுருவம் இருக்கவேண்டுவதே. மேற்கண்ட திருவுருவப்படம் போட்டகிராபில் அழகான பாடர் மத்தியில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

தனிப்பிரதி விலை ரூபா **1.**

லக்ஷ்மி சந்தாதாரர்களுக்கு அணா **12.**

சர்மா சகோதரர்,
வேப்பேரி, சென்னை.

சு தே சி

கம்பளிப் போர்வை

நைஸானது கம்பளிநூல்

கரைகள் கிடையாது — **குளிருக்கு அடக்கமானது.**

நெ. 1	6 மு x 3	வீதி போர்வை 1க்கு	ரூ.	8 8 0
நெ. 2	,,	,,	,,	7 8 0
நெ. 3	,,	,,	,,	7 0 0
நெ. 4	,,	,,	,,	6 0 0

கே. எஸ். முத்தையா & கோ.,

தபால் பெட்டி 99, : : சென்னை.

ஆச்சரியம் ! **இரகஸிய இங்கி.** ஆச்சரியம்!

இந்த இங்கியினால் இரகசியங்கள் கடிதம் மூலமாய் ஒருவருக்கொருவர் அறியவேண்டுமானால் அதில் உள்ள விஷயமறியஉபயோகிக்கும் முறைப்படி செய்தால் உடனே ஆச்சரியமாக ஷை கடிதத்திலிருந்து கறுப்பு இங்கியில் எழுதிய எழுத்து போல் தெரியவரும். இதை உபயோகிக்கும் முறைப்படி செய்கிற வரையில் இதிலெழுதியுள்ள விஷயத்தை அறிய ஒருவராலுமாகாது. கிரையம் 1 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1.

யுனைடெட் இண்டியா நாவல் ஸ்டோர்ஸ்,
போஸ்ட் பாக்ஸ், 1238, மதராஸ்.

எலக்டிரிக் பொன்கிலிட் மங்களூர் கை வளையல்.



இதை பளபளப்பான பொன்கிலிட் கொடுத்து பலமாதிரி பூ இலை கொடிகள் பின்னியதுபோல வெகு அழகாயும் வேலைத்தரமாயும் செய்யப்பட்டு வந்திருக்கிறது இதை பார்ப்பவர்கள் சவரப்பொன் வளையலென்றெண்ணுவார்கள். இதை அணிந்துகொண்டால் ஸ்திரீகளுக்கு வேறே ஆபரணம் தேவையில்லை. இது சகலரும் போட்டுக்கொள்ளலாம்.

பெரியவர்களுக்கு 4 வளையல் ரூ. 1-12-0.
சிறியவர்களுக்கு 4 வளையல் ரூ. 1-4-0.

ஜெனரல் மெயில் ஆர்டர் கம்பெனி, P. B. நெ. 232, மதராஸ்.

பம்பாய் சில்க் புடவை.

ஒரு பக்கம் நூல், மற்றொரு பக்கம் பட்டு, அசல்பெங்களூர் பட்டுப்புடவையை தோற்கடிக்கும், ரூ. 80 மதிக்கக்கூடியது. அநேகவிதமான கலர்களில் கிடைக்கும். அசல் பெங்களூர் புடவையையும் இதையும் ஒன்றாய்வைத்துப் பார்த்தாலும் வித்தியாசம் தெரியாது. கலருக்கு உத்திரவாதம். தினப்படி துவைக்கலாம்.

18 மு x 2½ அகலம் பட்டுக்கரை பெங்களூர் முந்தாணி, விலை ரூ. **30.**

ஷை ஜரிகை கரை, விலை ரூ. **36.**

கேட்லாக் இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

சில்க் அவுஸ், சென்னை.

உத்திரவாதம்! **24மணி நேரத்தில் குணம்.** உத்திரவாதம்!!

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணாடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதராஸ்.

ஜெர்மன் வைரக் கம்மல்.



அசல் வைரத்தையும் தோற்கடிக்கும் 7-கமலங்களுடனும் (Dimond-Extra) சவரன் பொன்னுக்குச் சமமான ஒருநாளும் கறுக்காத கனடியன் பொன்னால் மிகவும் இலக்ஷணமாயும் உறுதியாயும் செய்யப்பட்டவை. ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் பெரிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 4. ஆண்பிள்ளைகளுக்குக் கடுக்கனுயும், சிறு பெண்களுக்கு கம்மலாயும் உபயோகிக்கக்கூடிய சிறிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 3. தபால் கூலி வேறு.

ஆலிவர் அண்டு கம்பெனி, 22-வது பீட், மதராஸ்.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும்
செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு
எழுதவும்.

மானேஜர்:—வெஸ்ட் அண்டு கோ.,
மவுண்ட் ரோட், : : சென்னை.

இனும்! விலையுயர்ந்த 12 சாமான்கள்!! இனும்!!!

18 காரட் ரோல்ட் கோல்ட் கேசுடன் போன்டயல்
ரிஸ்லெட் கெடியாரங்கள்.

இதுவரை இம்மாதிரியான கெடியாரங்கள் இந்தியாவுக்கு வந்ததில்லை என்பது உண்மை. கெடியாரம் டயல் முழுமையும் பொன் பிளேட்டினால் தயாரித்து வெகு ரம்யமாய் இருக்கும். உயர்ந்த சாமான்களைக் கொண்டு தயாரித்தது. நெடுநாள்வரை உழைக்கக்கூடியது. நம்பிக்கையாக 3 வருஷம் உத்திரவாதம் கொடுக்கப்படும்.

இனும் விபரம்:—தோல்பட்டை 1, முகம் பார்க்கும் கண்ணாடி 1, தந்த சீப்பு 1, சென்ட் புட்டி 1, இமிடேஷன் கல் மோதிரம் 1, மணிபர்ஸ் 1, சாவிவளையம் 1, பேனாகத்தி 1, கல்வைத்த பட்டன் 4 ஆக 12. விலை ரூ. 8-8-0.

N.B.—ரவுண்டு, 4 மூலை, 8 மூலை பாரல் ஷேப் முதலியவை உண்டு. ஷேப்பைக் குறித்து எழுதவும்.

விலாசம்:—நோபுல் வாட்சு கம்பனி,
1/33, தாதா முத்தையப்பன் தெருவு, மதறாஸ்.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன ஆர்டருக்கு முந்துங்கள்.

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள். உடனே எழுதுங்கள்.

குறைந்த விலை! **ஆங்கில ஆசான்** பெருத்த விஷயம்!!

அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, நோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுலுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், மிகவும் முக்கியமானது.

இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.** தபால் செலவு அணா **6.**

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,

நெ. 259, தங்கசாலை தெருவு,

மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

ரீஜ்பந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துராப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா **1**-க்கு ரூ. **2** வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,

நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதராஸ்.

சர்வபடை சங்காரன்

எல்லாவித நாள்பட்ட படைகளையும், சொறி, சிரங்குகளையும் காயப் புண்களையும் சர்ம ரோகங்களையும் உடனே போக்கி குணத்தைத்தரும். விலை அணா 10.

எஸ். ராதா கம்பெனி, 246, தங்கசாலை தெரு, மதராஸ்.

இளமையும் பலமும் வீரமும் வன்மையும்.

1924-ஆம் பூனா இண்டியன் இண்டஸ்ரியல் கண்காட்சியில் முதல் தரமான சர்ட்டிபிகேட் பெற்றுள்ளது.

காமகேசரி

என்னும் வீரிய விர்த்தி மாத்திரைகளினால் ஒரே மணி நேரத்தில் உண்டாகும் வீரமற்ற இளைஞரும் பலங்குன்றிய வயோதிகரும் சிற்றின்பசுகம் அடைய இதுவே மருந்து.

காம கேசரி பார்மஸி,
412, தங்கசாலை தெரு, சென்னை.

20 மாத்திரைகள் விலை ரூபா ஒன்று.

அழகிய போட்டோப் படங்கள்.
கண்ணைக் கவரும் கலர்களில் ஜெர்மனியில் ஸ்பெஷல் ஆர்டருக்கு அச்சிட்டது.

(1) காசி விஸ்வநாத், (2) லக்ஷ்மி, (3) சரஸ்வதி, (4) கிருஷ்ணன், (5) ராமர் பட்டாபிஷேகம், (6) காளிங்க மர்தனம், (7) ஹர பார்வதி, (8) மகாத்மா காந்தி, (9) ஸி. ஆர். தாஸ், (10) திலகர், (11) சரோஜினி தேவி, (12) ரவிந்த்ரநாத் டாகூர். நமது சந்தா நேயர்களுக்கு 12 படமும் ரூ. 1. மற்றவர்களுக்கு ரூ. 1-8.

சொற்ப காபிகளே கைவச மிருக்கிறது.
முந்துங்கள்.

லக்ஷ்மி ஆபீஸ்,
தபால் பெட்டி 99, சென்னை.

தங்களுக்கு தென்னாட்டு பிராமணர்களால் செய்த சுத்தமான ஊர்காய் வேண்டுமென்றால் உடனே தாமதமின்றி கிடைக்குமிடம் நமது கம்பனியே.

நோயாளிகளுக்கு மிகவும் நல்லது.
பாட்டல் ஒன்றுக்கு விலை ரூபா **1-8.**
தபாற் சிலவு வேறு.

R. S. I. & Co., TRIPLICANE

18 காரட் ரோல்டு கோல்டு
கோல்டன் டைல் அமைத்த ரிஸ்லெட் கேடியாரம் நே. 60.

பலவிதமான விசித்ர வேலைகள் செய்த பொன்கிலிட்டு கேஸ்



ரிஸ்லெட் கெடியாரங்கள். பளபளப்பான பொன் கிலிட்டிலும் பார்ப்பவர்களை ஆச்சரியப்படுத்தி ரூபா. 100 மதிப்புள்ளதாய் தோன்றும். உயர்ந்த சாமான்களால் செய்தது. சரியான காலம் காட்டும். நெடுநாள் உழைக்கும். (கையில் கட்டும் சங்கிலி இனும்.)

நெ. 60 கெடியாரம் 4 மூலையுள்ளது ரூ. 8, நெ. 61 கெடியாரம் 8 மூலையுள்ளது ரூ. 8-8, நெ. 62 கெடியாரம் ரவுண்டுஷேப் ரூ. 7.

லண்டன் ஸ்விஸ் வாட்சு கம்பெனி,
வி. பி. சார்ஜ் வேறு. P. B. 328, மவுண்ட்ரோட், மதறாஸ்.

அகஸ்தியர் ஆபிஸ்

1925.] ஹுலத்திய கியாலண்டர் **[1925.**

பிரதிதினம் ஒருநாள் கிழிக்கக்கூடியது

விலை அணா **6**.

தபால்சிலவு வேறு,

துரைசாமி & கம்பெனி,

58, பெரியண்ணமுதலி தெரு,

மிண்ட் போஸ்ட்,

மதராஸ்.

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

புதிய சரக்கு புதிய கடியாரம்.



“டிக்—டாக்”

வால் கிளாக்

இப்பொழுது தான் வந்தது.

மிக்க அழகுள்ளது.

காலத்திற்குசரியான மணியை

காட்டக் கூடியது.

முந்துங்கள்! முந்துங்கள்!!

முந்துங்கள்!!!

சுவரில் மாட்டக்கூடியது.

விலை 1-க்கு ரூ. 3 தான்.

தபால் செலவு வேறு.

விலாசம்:—

பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி

நெ. 27, மதராஸ்.

நல்ல சமாசாரம்

உயர்ந்த பட்டணம் பொடி.

நாங்கள் உயர்ந்த புகையிலையினால் மிக்க குணமும் மணமும் உள்ள பட்டணம் பொடியும், ஆர், எஸ். சுகந்த மூக்குத்தூளும், ராஜன் பரிமள வாசனைப் புகையிலையும் சிறந்த முறையில் விசேஷமாய் தயார் செய்து இந்தியா முழுதும் அனுப்பிவருவதுடன் கீழ்க்கண்ட சாமான்கள் நல்ல சரக்காயும் விலை சரசமாகவும் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சப்ளை செய்து வருகிறோம்.

வாசனை மிகுந்த அசல் காஜிபூர், பன்னீர், கல்கத்தா பரிமள சோப்புகள், வாசனை தைலம், அத்தர், பற்பொடி தேள் மருந்து, பரஹம்பூர் காரமஸாலா, ஜெர்மனி, கல்கத்தா, விசித்திரமான கலர் படங்கள், பீடி, சுருட்டு சிகரெட்டுகள் முதலியன எங்களிடம் கிடைக்கும்.

ரொக்கம் அல்லது வி. பி. பி. வெளியூர் ஆடர்களை உடனுக்குடனே கவனித்து தகுந்தவாறு அனுப்பப்படும். விலை விவரமடங்கிய புஸ்தகத்துக்கு எழுதினால் அனுப்புகிறோம்.

பி. வி. ராஜன் & கம்பெனி,

44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிட்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா என்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷதசாலை, எழும்பூர், மதராஸ்.

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	$8\frac{1}{2}$	,,	10	,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, $1\frac{1}{2}$.

உசத்தி ரூ. $3\frac{1}{2}$ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு	அக. ரூ.	2		10 முழம்	40	இஞ்சு	அக. ரூ.	7
6 ,,	24	,,	,,	$2\frac{1}{2}$		16 ,,	40	,,	,,	12
7 ,,	29	,,	,,	3						
8 ,,	40	,,	,,	$5\frac{1}{2}$		18 ,,	40	,,	,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ், — — காசி.

பி. நடேச முதலியார்,

இரும்பு பெட்டி வியாபாரம், நெ. 59, பிராட்வே, மதராஸ்.

எங்களுடைய தொழிற்சாலையில் உற்பத்தியாகும முதல்தரமான கெட்டி இரும்புப்பெட்டிகள்,புதித்தகட்டினால் நீண்டகாலம் உழைக்கக் கூடிய பல ரகங்களிலும், சயிசு வாரியாக புதுமாதிரி கள்ளறை முதலியன நேர்த்தியாக வைக்கப்பெற்று, பெயிண்டிங் கொடுத்து அவரவர்கள் மனம் திருப்திகர மாகும்படி மானேஜர் பார்வையுடன் ஆர்டரில் கண்டபடி தயார்செய்து கூடிய சீக்கிரம் கொடுக்கப்படும்.

எங்களிடம் சகலவிதமான மெஷின்களும் ரிப்பேர் செய்யப்படும்.

நடராஜன் இன்ஜினீரிங் தொழிற்சாலை,

சுப்ராயப்பிள்ளை தெரு, கோண்டிதோப்பு, மதராஸ்.

ஆபீஸ் :—நெம்பர் 59, பிராட்வே, மதராஸ்.

Printed by M. A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.